வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆனி திங்கள் 30-ம் நாள் (14—7—1963) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 22 | இதழ் 7

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# சிங்களமே தேசிய மொழி

## தம்பிஐயா போட்டியிடார்

### வீம்புக்கு வேட்டையாட விருப்பமில்லையாம்

(நமது லண்டன் நிருபர்)

ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு நடக்கவிருக்கும் உப தேர்தலில் திரு. ஏ. எல். தம்பி ஐயா போட்டியிடப்போகிறார் என்று கூறப்படுவது முற்றிலும் பொய்யான செய்தியாகும் என்றும, சில விஷமிகள் கிளப்பிவிட்ட இந்த வதந்திக்கு திரு. தம்பி ஐயாவே லண்டனில் மறுப்புத் தெரிவித்திருக்கிறாரென்றும் அறியப்படுகிறது.

லண்டனிலுள்ள தமது நண்பர்களிடம் திரு. தம்பி ஐயா தமக்கு அரசியலில் பிரவேசிக்கும் நோக்கம் இல்லை எனவும், தமிழர்களுக்கு இன்னல்களுக்கு மேல் இன்னல் ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் தான் போய் 'வீம்புக்கு வேட்டையாட' விரும்பவில்லை எனவும் தெரிவித்ததாக நமது லண்டன் நிருபர் தெரிவிக்கிறார்.

சமீபத்தில் தான் திரு. தம்பி ஐயாவின் மகள் 'பாரிஸ்டர்', பரீட்சையில் தேர்ச்சி பெற்றுள்ளார். இன்னும் பல்வேறு துறைகளில் இவர் பயிற்சி பெற லண்டனிலேயே தங்கியிருக்க விரும்பியுள்ளார். இதனால் திரு. தம்பி ஐயாவும் தமது மகளுடையதும், தமது சொந்த அலுவல்கள் காரணமாகவும் லண்டனிலேயே மேலும் சில காலம் தங்கியிருக்க யோசித்திருப்பதாகவும் நமது லண்டன் நிருபர் மேலும் கூறுகிறார்.

## சிம்மாசனப் பிரசங்கம் பிரகடனம் செய்யும்?

### பிராந்திய சபை மசோதா சிதைந்த உருவில் வெளி வரும்

சிங்களம் மட்டுமே தேசிய மொழி என்று சிம்மாசனப் பிரசங்கம் பிரகடனம் செய்யுமென்றும், காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா பிராந்தியசபை பற்றித்தயாரித்திருந்த நகல் மசோத சிதைக்கப்பட்டு, வேறு உருவத்தில் தலை காட்டுமென்றும் அறியப்படுகிறது.

எதிர்வரும் புதன்கிழமை இலங்கையின் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ நிகழ்த்தவிருக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தில் சிங்களம் மட்டும் இலங்கையின் தேசிய மொழியாகப் பிரகடனம் செய்யப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

பிரசங்கத்தின் ஆரம்பமே இந்தப் பிரகடனத்துடன் தான் இருக்கும் என்றும், அரசாங்கம் சிங்கள மக்களுக்கு எதிர்வரும் வருடத்தில் செய்யவிருக்கும் சிங்கள தீவிர அமுலுக்கான சில விபரங்களும் இருக்கும் எனவும் பாராளுமன்ற வட்டாரம் ஒன்று கூறுகிறது.

#### பழைய மசோதா உருக்குலைந்தது

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா தமது பதவிக் காலத்திலேயே ஏற்படுத்திவிடவிருந்த பிராந்திய சபைகள் ஸ்தாபித மசோதா இப்போது அவருடைய மனைவியார் சிறிமாவினால் ஒரு உயிரற்ற முண்டமாக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த உண்மையையும் தமிழ் பேசும் பொதுமக்கள் சிம்மாசனப் பிரசங்கத்தின்மூலம் அறிந்து கொள்ளலாம்.

'பிராந்திய சபைகள்' என்று ஆரம்பத்திலிருந்து அழைக்கப்பட்டு வந்ததைக் கூட சிறிமாவோ அரசாங்கம் இப்போது மாற்றிக் கொண்டிருக்கிறது. "பிராந்திய சபை" என்ற பெயர் சமஷ்டிக் கருத்தைக் கொண்டதாகவும், சமஷ்டி ஆட்சிக்கு வழி வகுக்கக் கூடியதாக இருக்குமென்றும் கருதப்படுவதாலும் அதனை "மாவட்ட சபை"

(9-ம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியிலிருந்து வெளியேற அங்கத்தினர் திட்டம்

### எதிர்க் கட்சித் தலைவருடன் இரகசிய மாநாடு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுவைச் சேர்ந்த நான்கு எம். பிக்கள் சமீபத்தில் யூ. என். பி.க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பதாகவும், இவர்கள் எந்த நேரத்திலும் திரு. டட்லிக்குப் பின்னால் சென்றுவிடக் கூடுமெனவும், அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்திகள் அடிபடுகின்றன.

இவ்வட்டாரங்கள் குறிப்பிடும் நால்வரில் ஒருவரெனக் கூறப்படும் சுதந்திரக் கட்சியின் மீரிகமத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. விஜயபாகு விஜயசிங்க இந்த வாரத்தில் அரசாங்கத்தையும் அதன் மந்திரிமார்களையும் 'சுயநலமிகள், கபடர்கள்' என்றெல்லாம் பகிரங்கமாகக் கூட்டத்தில் தாக்கியிருப்பதாக வெளிவந்த செய்தியும் குறிப்பிடத்தக்கது.

அவரது பிரசங்கத்தை யூ. என். பி. பத்திரிகையான 'சியரட்ட' இவ்வாரம் முதல் பக்கத்தில் பிரகாசமாகப் பிரசுரித்துள்ளது.

திரு. விஜயசிங்க வெகு விரைவில் அரசாங்கத்தைக் கண்டித்துப் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிடக் கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு எதிராகவோ, அல்லது பட்ஜெட்டுக்கு எதிராகவோ மேற் கூறப்பட்ட நால்வரும் வாக்களித்து விடக் கூடும் என்று சுதந்திரக் கட்சி வட்டாரமே ஐயுறுகிறது.

#### தொண்டமானும் பிரதமரும்

பிரதமர் சிறிமாவோவுக்கும் நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமானுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருப்பதாகவும், திரு. தொண்டமான் அந்தரங்கமாக அரசாங்கத்தைத் எதிர்த்து வருவதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

#### 15 எம். பி. கள் விலகுவார்களா?

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 15 எம். பி.க்கள் அரசாங்கக் கட்சியிலிருந்து விலகத் தயாராகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு ஒரு மந்திரி மயக்கமடைந்தார் என்பது உண்மையா என்று இவ்வாரம் யூ. என். பி. பத்திரிகை வினவுகிறது.

## கத்தோலிக்கர் துரோகிகளாம்

யாழ்ப்பாணத்தில் இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சியின் 20வது ஆண்டுக் கூட்டத்தையொட்டி நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தொகை இருநூற்றி முப்பத்திமூன்றும். காரணம் இருபதாவது ஆண்டு விழா கொண்டாடுவது பற்றி அவர்கள் சுவர்களில் சிவப்பு மை கொண்டு எழுதிய சுலோகங்களில் முக்கியமானது "கத்தோலிக்கர்கள் துரோகிகள்; நாட்டின் விரோதிகள்" என்பதாகும்.

முக்கியமாக கத்தோலிக்கர்கள் வாழும் கொழும்புத்துறைப் பகுதியில் கூடுதலாக இச் சுலோகங்களைக் காண முடிந்ததாம்.

இதனால் வெறுப்புற்ற கத்தோலிக்கர்களும் கத்தோலிக்கர்கள் அல்லாத கொம்யூனிஸ்டு அனுதாபிகளும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையாம்.




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

றோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'றோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# பாரினில் சிறுமை கண்டு பொங்கிய பாரதி பலாத்காரப் புரட்சிவாதியா?

## மனித சுதந்திரம் வேண்டிய கவிஞர் சர்வாதிகாரத்தை எங்ஙனம் ஒப்புவார்?

### பாரதி பார்வையில் புது நோக்கு

—"மணிமொழியாளன்"—

'தோள் கண்டார் தோளே கண்டார்' என்றது போல பாரதியைப் பலரும் பல கோணத்தில் அணுகினர்கள். ஆனால் பாரதியைக் கண்டார் யாருமிலர். சிலர் தூணை விட்டுத் துரும்பைப் பிடித்துக் கொண்டு மக்களை ஏமாற்றவும் முனைகிறார்கள். இவர்களின் முடக்குவாதத்திற்குப் பதில் கொடுப்பது போன்று அமைந்திருக்கும் கட்டுரையாளரின் கூற்று, பாரதியைப் புதிய கோணத்தில் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

மகா கவி பாரதியின் 'தனியொருவனுக் குணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற அடியை எடுத்துக் காட்டி பாரதி சுத்த கம்யூனிஸ்ட் என்று வாதிப்போர் பலர் இன்று உள்ளனர். ஜகத்தினை அழித்திடுவோம் என்பது உயர்வு நவிற்சி என்றும் இதன் உண்மையான கருத்து இந்த உலகிலே ஒருவராகிலும் பசி என்னும் பிணி இல்லாது இருக்க வேண்டும் என்பதேயாம் என்றும் அன்னர் அறியார். 'மண்ணிலார்க்குந் துயரின்றிச் செய்வேன் வறுமையென்பதை மண் மிசை மாய்ப்பேன்', 'இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்', 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற அடிகளிலும் மேற் கூறிய கருத்துத் தொனிப்பதைக் காணலாம். தனியொரு மனிதனுக்காக இவ்வுலகத்தையே அழிக்கும்படி கூறப் பாரதி என்ன அறிவிலியா?

#### பொது நோக்கு

பாரதியின் கவிதைகளிலும் உரைச் சித்திரங்களிலும் பொது நோக்குத் தென்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. 'பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்... துன்பமும், மிடிமையும், நோவும் சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெலாம் இன்புற்று வாழ்க' வேண்டும் என்று விரும்புவதும் கலியை வென்று கிருதயுகத்தைச் சமைக்க வேண்டும் என்று கூறுவதும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். இப் பொது நோக்கு அல்லது சமதர்மம் வெறும் அரசியல் தத்துவமல்ல. அது மனித வாழ்க்கையைப் பண் படுத்திக் காட்டுகிற ஒரு ஒழுங்கு முறை. தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் இத் தர்மம் பொதுவானது. அறிவாளிகள் பலர் இதைப் பற்றிச் சிந்தித்துள்ளனர். இன்றும் சிந்திக்கின்றனர். கூரிய அறிவு படைத்த பாரதி இச் சமதர்மக் கருத்துக்களை வெளியிட்டதில் வியப்பில்லை. தேசிய கவி என்ற முறையில் பாரதி இக் கருத்தைச் சுதந்திர நோக்குடன் வெளியிட்டுள்ளார். ஆனல் ஆங்காங்கே தென்படும் ஓரிரு கருத்துக்களை எடுத்துக் காட்டிப் பாரதி கம்யூனிஸ்ட் என்று சொல்வதுதான் வியப்பாயுள்ளது. பாரதியைக் கம்யூனிஸ்ட் என்று சொல்லமுற்படல் அவருக்கு முந்திய பல கவிஞரை—அரசியல் பேசிய கவிஞரை—கம்யூனிஸ்டுகள் என்று சொல்லும் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தும்.

#### பலாத்காரப் புரட்சியை விரும்பினரா?

பாரதியைக் கம்யூனிஸ்ட் என்போர் அவர் பலாத்காரப் புரட்சிவாதி என்று தவருகக்கருதியே போற்றுகிறார்கள். பாரதி காலத்தில் புரட்சிக்கு வித்தாய் அமைந்திருந்தது யதார்த்த வாழ்வில் இருந்த சாதி சமய வேற்றுமையாகும். எதிர்க்க வேண்டியது ஏகாதிபத்தியமாகும். தன் பாட்டுத் திறத்தாலே இவ் வையகத்தைப் பாலித்திட விரும்பிய பாரதி 'மனிதரில் ஆயிரம் ஜாதி என்ற வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை!' என்று கூறிப் பாரத மாதாவுக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடினர். வீர சுதந்திரம் வேண்டி நின்ற பாரதி சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக விருந்த எதையுமே தாக்கத் தயங்கவில்லை. தீவிர சுதந்

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### "சிதம்பர சுப்பிரமணியன்"

வெளியிடுவோர்:-

சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் செயற் குழுவினர் உரும்பிராய்

பெறும்முறை:

அஞ்சற் செலவுக்குரிய முத்திரையை அனுப்பி இவ்விதழை இலவசமாகப் பெறலாம்.

உரும்பிராயில் பெயரோடு புகழோடு விளங்கும் சிதம்பர சுப்பிரமணிய கோயிலின் செயற் குழுவினரால் வெளியிடப்பட்ட புத்தாண்டு நிறைவு மலர் மேற் குறித்த மலர்.

இறைவனை அடைவதற்கு "சுலபமான வழி" எம்மை முற்றிலும் இறைவனுக்கு ஒப்படைத்து பத்தி செய்வதே என்பதை வலியுறுத்தும் சிற்பவானந்த அடிகளின் கட்டுரை இவ்விதழின் முதற் கட்டுரையாக அமைகிறது. இராமக்கிருஷ்ணரின் உயர்ந்த கருத்துக்களை இக்கட்டுரை தன்னுள் அடக்கியுள்ளது.

"அடுத்து எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும், கேட்கினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்கியம் கந்தபுராணம்" என்ற நல்லூர் நாவலரின் கூற்றை தன்னுள் தாங்கி "நன்னறி ஒழுகச் செய்வது கந்தபுராணம்" என்ற தலைப்பில் பண்டிதமணி கணபதிப் பிள்ளையின் பாங்கான கட்டுரை வெளிவந்துள்ளது.

"கந்தர் அலங்காரம் வாழ வழி காட்டும் நூல். செத்துப் போகவும் வழிகாட்டுகிறது" என்று வியப்பூட்டும் சொற்தொடருடன் "தமிழர் கருவூலம்" என்ற தலைப்பில் தமிழறிஞர் கி. வா. ஜெகநாதன் யாத்துள்ள கட்டுரை எம் சிந்தனையைத் தூண்டி இவ்விதழிற்குப் புதுமெருகை ஊட்டுகிறது.

ஏன் பிள்ளையார் தன் தம்பி முருகன் போல் திருமணம் செய்யாது தனிக் கட்டையாக இருக்கிறார் என்பதை 'கலியாணமே வேண்டாம்' என்ற தலைப்பில் திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள் சுவையூட்டும் முறையில் ஓர் தத்துவக் கட்டுரை வரைந்திருப்பது இவ்விதழிற்கு மேலும் அழகினைத் தருகிறது.

மற்றும் இத்தகைய நல்ல கட்டுரை, கவிதை ஆகியவற்ருேடு 'சிவசுப்பிரமணியன்" என்ற மலர் மலர்ந்து மணம் வீசுகின்றது. படித்துப் பயன் பெறுவது செந்தமிழ்ச் சிவநெறி மக்களின் கடன்.

கோயிலின் ஆட்சி அமைப்புச் சிறப்பும் அறிக்கையாக இவ்விதழில் இணைக்கப்பட்டிருக்கிறது. மலர் பாராட்டுதலுக்குரியது.

"ஈழவேந்தன்"


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு; திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


## கவிதைப் பூங்கா

### கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

கற்ற உரவோர்கள் பொற்பெனப் போற்றவே
காசினி உலவவரும்—புகழ்
வெற்றி எட்டுத்திக்கு முற்றிலுமே சென்று
மேவிடும் உன்கவிதை
கொற்றவன் அந்நூலினை பெற்றிடா வினையினுல்
குற்றம்பு ரிந்தான்; லட்சம்—பொன்னை
இற்றைக்கே நல்வேன்நான் பெற்றுக் களிஎன
இயம்பிட்டார் மன்னராங்கு.

"வாழ்வதற்கோ இந்தத் திமை புரிந்தனன்
மாசுடை மஹ்மூது—புகழ்
மாள்வதற்கே விதி தேடிவிட்டான் என்றும்
மாநிலந் தூற்றிநிற்கும்;
மாலினிய உயர் நூலுருவிற் செய்த
மாபெரும் ஷாஹ்நாமா—திறன்
ஆழ்ந்துணரு முன்னை சூழ்ந்துவரும் புகழ்"
அருங்கவி உரைக்க; மன்னர்

கவிவலவ! உன்றன் புகழுணரா மஹ்மூத்
காவலன் செயல்வைது—பாடி
சுவையுடைய ஷாஹ்நாமாவிலே சேர்த்த
பாநூறு எனக்களித்து
அவதூறினை இளை மஹ்மூதுக்கே மீண்டும்
அனுப்புக நூலினையே—மீண்டும்
நவை புடைத்துஅவர் தவறுணர்ந்து;உன்னை
நாடிடச் செய்வேனென்ருர்.

(தொடரும்)

### செத்தால் எனைத் தொடர்ந்து சென்றிடு நீ போருக்கு!

—"அழகு"—

கன்னல் மொழியைக்
கனியிதழின் இன்னமுதை
பின்னல் எழிலைப்
பேசும் விழி அழகை
மின்னல் இடையோடுன்
மேனி அழகினையும்,
உன்னேடு நானிருந்து
உண்ண இது நேரமில்லை!

அன்னை மொழிதன்னை
அழிக்கின்ற சட்டங்கள்
சின்னவர்கள் நீட்டுகிருர்
சிறையென்ன? பூஞ்சோலை
முன்னணியில் போர்முரசு
முழங்கிறது; இன்னும்நான்
உன்னேடிருந்து
உணவுண்ண நேரமில்லை!

தங்கச் சிமிழ்;அழகு
தமிழனைய நின்மதலை;
எங்கள் குலக் கொழுந்து
எழுந்தெங்கே அப்பாவென்(று)
உங்களைக் கேட்டால்,
உயிர் தந்து மொழிகாக்க,
பொங்கும் அறப்போருக்குப்
போய்விட்டார் என்று சொல்லு.

சத்தியத்தைக் கையேந்தி
தளரா உறுதியுடன்
நித்திரையை விட்டு
நினைவே கடமையதாய்,
எத்தனையோ இன்னல்களுக்
கிலக்காகும் வேளையில்; நான்
செத்தால் எனைத், தொடர்ந்து
சென்றிடு நீ போருக்கு!




தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்.

கே: அரசாங்கம் தமிழருக்குச் செய்யும் அநீதிகளை சுதந்திரன் மட்டும் கண்டிப்பதற்குக் காரணம் என்ன? மற்றப் பத்திரிகைகள் கண்டிப்பதில்லையே!

ப: இந்நாட்டு. தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் சுதந்திரன் மட்டுமே. அநீதிகளைச் சுட்டிக் காட்டினால் ஆட்சியாளருக்குக் கோபம் வந்துவிடுமோ என்று நித்தம் நித்தம் அஞ்சிச்சாகின்றன, மற்றத் தொடை நடுங்கிப் பத்திரிகைகள்.

கே: 1964-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சிங்களமே ஆட்சி மொழியென்றும் தமிழ் மக்களுக்கு அடிப்படையுரிமை கொடுக்கப்படும் என்றும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதே, இதன் விளக்கம் என்ன?

ப: அடிப்படை உரிமைப் பேச்சும் புஷ்வாணமாகிவிட்டது. சிறுபான்மையோருக்கு அடிப்படை உரிமை வழங்கினால் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்று இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

கே: தற்காலப் பெண்கள் நைலோன் உடைகளை அணிகிறார்களே, காரணமென்ன?

ப: அங்கங்களின் பூரிப்பை ஆடவர்கள் கண்டு களிக்க நைலோன் உதவி செய்கிறது.

கே: யாரது! •குயுக்தியாரா! நீர் சிறிமாவுக்குப் பாத பூசை செய்ததாக பேச்சு அடிபடுகிறது. அது உண்மைதானா?

ப: வாயை மூடும். என் தலையில் தலைப்பாகையில்லை என்பது நினைவிருக்கட்டும்.

கே: நீர் இதுவரை எந்தப் பெண்ணையாவது காதலித்ததுண்டா?

ப: ஐயோ! அந்தக் கண்ணுவியை இப்பொழுது கிளறுகிறீர்கள். இதயத்தின் அடித்தளத்தில் மங்கிப் போய் கிடக்கும்...புத்துயிர் பெற்று விடும்.

கே: எங்களைச் சிரிக்க வைப்பதினால் உங்களுக்கு யாதும் பயன் உண்டா?

ப: உடலுறுதிமிக்க சமுதாயத்தைச் சிருஷ்டிப்பது தான் அதனால் கிடைக்கும் பயன்.

கே: உலகில் பெண்கள் பிறக்காவிட்டால்?......

ப: இலங்கையில் சிறிமா அரசாங்கம் ஏற்பட்டிருக்காது.

கே: அகில இலங்கை ஆனைப் பந்திக் காங்கிரஸ் என்ன செய்கிறது?

ப: எதைச் செய்யவும் நேரமில்லையே! என்ன செய்யலாம்?

கே: காதலுக்கும் விவாகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: காதல்: வாடி வீடு—விவாகம்: இல்லம்.

கே: யான் தங்களிடம் காதல் பாடம் படிக்கலாமென எண்ணுகிறேன்.

ப: ஐயா, பிறர் கற்றுக் கொடுத்துத் தெரிந்துகொள்வதல்ல காதற் கலை.

ஃ

ராமன், பலாங்கொடை.

கே: தமிழ் நாட்டில் திருவண்ணாமலை இடைத் தேர்தலில் காங்கிரஸின் தோல்விக்குக் காரணமென்ன?

ப: இரு காரணங்கள்—ஒன்று: காங்கிரஸின் செல்வாக்கு சரிந்து கொண்டிருப்பது. மற்றொன்று: எந்த இடைத் தேர்தலில் தி. மு. கவுடன் காங்கிரஸ் நேரடியாக மோதினாலும், நிச்சயம் காங்கிரஸ் மண் கவ்வும் என்பது. திருவண்ணாமலைத் தோல்வி பொதுத் தேர்தலில் அடையும் தோல்வியை விடப் பெரிய தோல்வி என்று கருதுகிறாராம் முதன் மந்திரி காமராஜர்.

இரா. வெ. அழகர்சாமி,
பண்டாரவளை.

கே: அடுத்த தேர்தலில், தமிழ்ப் பகுதி அனைத்திலும் தமிழரசுக் கட்சியே வெற்றி பெற்றால், கூட்டாட்சி எளிதாகக்கிடைக்குமா?

ப: கூட்டாட்சிக்கு வழி பிறக்கலாம். வெறும் தேர்தல் வெற்றியால் மட்டும் கூட்டாட்சி பெறலாம் என்று எண்ண வேண்டாம்.

ஃ

சி. குணம், பளை.

கே: சென்ற நாட்களில் எங்கள் மீது அன்பு செலுத்திய இரு உறவினர்கள் இப்போது எம்மைக் கண்டால் அலட்சியமாக, மதிக்கிறார்களே! ஒருவேளை ஏழையான படியாலோ? அப்படிப்பட்ட உறவினருடன் இன்னும் நட்புறவு வைத்துக் கொள்ள விரும்புகிறேன் நான். ஆனால் என் கணவரோ அந்த உறவு தேவையில்லை என்கிறார். இதில் யாருடைய வாதம் சரியானதென்று சொல்லுங்கள் மாமா?

ப: உங்கள் கணவரின் வாதம் சரியானது. உறவுக்கு அடிப்படை பணம் என்கிறார் மாமேதை கார்ல் மாக்ஸ்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா. சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

பணத்தைச் சம்பாதியுங்கள், உறவினர் உங்கள் வீடு தேடி வருவார்கள்.

ஃ

சி. பரமலிங்கம், வட்டகொடை.

கே: "தமிழ் வாழ்க!" என்ற பதத்தைப் பார்த்ததும் சில தமிழர்கள் வெருட்சியடைகிறார்களே காரணம் என்ன?

ப: எங்கே தமிழ் வாழ்ந்து விடுமோ என்ற பீதிதான் காரணம். தமிழ் வாழ்ந்துவிடின் பிறகு அவர்கள் சிங்கள வகுப்புவாதிகளுக்குக் காக்காய் பிடிக்க முடியாமல் போய்விடுமே!

கே: தமிழ் வாழ்க என்ற பதத்தைப் பார்த்து சில சிங்கள நண்பர்கள் புன்முறுவல் செய்கிறார்கள், இதன் கருத்தென்ன?

ப: "தமிழ் எப்படி ஐயா வாழ முடியும், நாங்கள் தான் சிங்களத்தை மூர்த்தண்யமாகத் திணித்துக்கொண்டிருக்கிறோமே!" என்பதுதான் அதன் கருத்து.

ஃ

எம். ஐ. ஏ. ஜவார்,
பெரியகிண்ணியா.

கே: தனிச் சிங்களச் சட்டம் 1964-ல் அமுலாக இருப்பதாக அமைச்சர்கள் கூறும்பொழுது யாழ்ப்பாணம் துரையப்பா, மூதூர் மஜீந், கல்முனை அகமது போன்றவர்கள் தமிழ் பேசும் மக்களிடத்தில் கூறப்போகும் சாட்டுப் போக்குகள் எவை என்பதைத் தங்களால் சொல்ல முடியுமா?

ப: எதையும் இனிக் கூற முடியாது "பிரதமரைச் சந்தித்தோம், அவராக வாரி வழங்கப் போகிறார். அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத்தில் தேர்ச்சி பெற இன்னும் இரு வருடங்கள் அவகாசம் கொடுக்கப்படும்" என்று பறைசாற்றி பாசாங்கு செய்த அவர்கள் இன்று இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க பொலிசில் புகார் செய்ய வேண்டும் போலும்! 1964 ஜனவரி முதல் சிங்களம் அமுலுக்கு வருவதால் அவர்கள் குட்டு வெளிப்பட்டுவிட்டது.

ஃ

நா. வடிவேலு, சாவகச்சேரி.

கே: அரசாங்கத்துக்குப் பந்தம் பிடித்த தமிழ்த் தலைவர்கள் என்போர் இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ப: இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பந்தத்தை அணைத்துவிட்டு, மூலை முடுக்குகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் பதுங்குவதற்கு!

ஃ

எம். எம். எகியா,
பெரியகிண்ணியா.

கே: தற்போதைய சுகாதார அமைச்சர் பத்யுத்தின் மஹ்மூத் சென்ற மாதம் 26-ம் திகதி மூதூர் ஆஸ்பத்திரியை திறந்து வைக்க வருகிறார் என்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீந் தினசரி பத்திரிகை ஒன்றில் கூறியிருந்தாரே, இந்த அமைச்சர் வராமல் தடைப்பட்டதற்கு காரணம் என்ன?

ப: கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக நீங்கள் கூறியிருந்தீர்களோ?

ஃ

டி. எல். றெகுமத்துள்ளா,
பெரிய கிண்ணியா.

கே: ஆங்கில அறிவற்ற தமிழ் எஸ். எஸ். ஸி. ஆசிரியர்கள் நீட்டுக் கால் சட்டை அணிந்து பாடசாலைக்கு போகின்றார்களே!

ப: கால் சட்டை அணிய ஆங்கில அறிவு அவசியமில்லையே! மொழிக்கும் உடைக்கும் என்ன சம்பந்தம்? சிங்களவரின் தேசிய உடையும் கால் சட்டைதான் என்கிறார் ஒரு தலைமை பிக்கு.




வலியால் அவஸ்தைப்படுவானேன்?

# டிஸ்பிரின்

வலியை உடனே நிவாரணிக்கின்றது



டிஸபிரின் பரிபூரணமாகக் கரைந்து, உடனடியாகச் செயலாற்றுவதால் துரித நிவாரணம் ஏற்படுகின்றது.

தடிமன், சளிச்சுரம், தசை மற்றும் நரம்பு வலிகள் நோவுகள், பல்வலி மற்றும் மாதரின் சூதக வலிகளுக்கு உடனடி நிவாரணம் காண டிஸபிரினை எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்.

DSC/JWT/6




டிஸ்பிரின் உங்கள் டாக்டரால் சிபார்சு செய்யப்படுகின்றது.

## டிஸ்பிரின்

பரிபூரணமாகக் கரைகின்றது.

டிஸ்பிரினில் பினசெட்டின கலப்பு கிடையாது.

ரெக்கிட் அன் கொல்மன் ஆப் சிலோன் லிமிட்டெட்.
ஏஜண்டுகள்: ஈ. பி கிரீஸி அன் கம்பெனி லிமிடெட்
55/57, இராணி வீதி, கொழும்பு

# ஒன்றுபட்ட இலங்கை உருவாக சமஷ்டி அரசியலே உகந்தது

## நியூயோர்க் கவர்னர் உரையும் தமிழரசுத் தந்தை கருத்தும்

சமஷ்டி அரசியல் பற்றி நாம் நன்கு அறிந்திருப்பது அவசியம். பலருக்கும் சமஷ்டி அரசியல்முறை பற்றிய அத்தியாவசிய உண்மைகள் புரிவதில்லை. இது சம்பந்தமாக, அமெரிக்காவிலுள்ள ஹார்வாட் பல்கலைக் கழகத்தில், நியூயோர்க் கவர்னர் திரு. நெல்சன் ரொக்பெல்லர் சமஷ்டி பற்றி ஆற்றிய விரிவுரைகளிலிருந்து சில கருத்துக்களை இங்கு தருவது வாசகர்களுக்கு உதவியாக இருக்கும்.

அவர் தமது உரைகளில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் பின்வருமாறு:

"சுதந்திரத்தின் எதிர்காலம் சமஷ்டிக் கருவூலத்திலேயே தங்கியுள்ளது என்ற எனது ஆழ்ந்த நம்பிக்கையை இங்கு அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

அரசாங்க அலுவல்களை நடத்த உதவும் ஒரு வெறும் ஒழுங்கு முறை என்ற கருத்தில் நான் சமஷ்டியைப் பற்றிக் கூறவில்லை. ஒரு சுதந்திர மக்கள், தமது சுதந்திரத்தின் ஒரு பகுதியைத் தமது முன்னேற்றத்துக்கும் பாதுகாப்புக்குமாக, அரசியல் அதிகாரம், சக்தி ஆகியவை பரவலாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட ஓர் அரசியல் முறைக்கு விட்டுக் கொடுப்பதையே நான் குறிப்பிடுகிறேன். இங்குள்ள அரசியல் அதிகார பீடங்கள், ஒன்றை இன்னொன்று அழிக்க முடியாதவை.

ஆகவே, எல்லாக் காலங்களிலும், சுயாதிபத்தியம் இறுதியாக இருக்கும் இடமாகிய மக்களின் விருப்புக்கும், தேவைக்கும் செவிசாய்க்கும், ஓர் பங்கீட்டு சுயாதிபத்தியமே சமஷ்டியாகும்.

ஓர் சமஷ்டி அரசியல் முறை, கடினம் இல்லாத உறுதிப்பாட்டையும், அசட்டைத்தனம் இல்லாத பாதுகாப்பையும் நாடுகிறது.

சமஷ்டி அரசியல் முறையைச் சரியாக விவரிக்க, அது இயங்கும் நான்கு முக்கிய முறைகளை இங்கு நான் குறிப்பிடுவது உசிதமாகும். அவைகளாவன:

1. சமஷ்டி, ஒற்றுமையில் வேற்றுமையை வளர்க்கிறது.

2. சமஷ்டி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் புதிய புதிய முறைகளை,

### சமூகவாதி

கற்பனையை அனுமதித்து, வளர்க்கிறது.

3. சமஷ்டி, ஒரு 'பன்மைக்' கருத்தாகும். அதாவது, அது பல சக்திகளுக்கு, நம்பிக்கைகளுக்கு, சிருஷ்டிகளுக்கு இடமளிக்கிறது.

4. சமஷ்டி, அளவு மீறும் சக்திகளுக்கு இடமளிக்காமல், அதே நேரத்தில் புதிய சக்திகளுக்கும், கருத்துக்களுக்கும் பூரண சுதந்திரமளிப்பதன் மூலம், ஓர் சமநிலையை வலியுறுத்துகிறது.

பொருளாதார, சமூகத் துறைகளில் முன்னேற்றம் காணப் பல அரசியல் முறைகளையும் பின்பற்ற இடமளிக்கும், வளைந்து கொடுக்கும் ஓர் அரசியல் அமைப்பே சமஷ்டியாகும்."

### ஒப்பிட்டுப் பார்ப்போம்

இனி திரு. ரொக் பெல்லரின் இக் கருத்துக்களை, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் சில வருடங்களுக்குமுன் வெளியிட்டிருந்த பிரசுரமொன்றில் காணப்படும் கருத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். அப்பிரசுரத்தில் காணப்பட்ட கருத்துக்களாவன:

"தேசிய ஒற்றுமைக்கும், பிரதேச உணர்ச்சிக்குமிடையே பாலமமைக்கும் முறையே சமஷ்டி.

குறிப்பிட்ட சில நோக்கங்களால் ஒன்றுபட்ட மக்களிடையே ஒரு உண்மையான ஒற்றுமையை உண்டாக்குவது சமஷ்டி.

அது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது. நாடு முழுவதற்குமான விஷயங்களை மத்திய அரசாங்கம் கவனித்துக் கொள்கிறது; அவ்வப் பிரதேசங்களுக்குரிய விஷயங்களை உள்ளூராட்சி மன்றங்கள் கவனித்துக்கொள்கின்றன.

ஒரு மக்கள் தமது திறமைகளைச் சிறந்த முறையில் வெளியிட்டுத் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தகுந்த அரசியலமைப்பு சமஷ்டியே.


அது அரசியல் உறுதிப்பாட்டைத்தந்து, வெறுப்பு, அவநம்பிக்கை, அம்மிச்சம் ஆகிய உணர்ச்சிகளுள்ள சூழ்நிலையை அகற்றி, ஆக்கபூர்வமான முயற்சிக்கும் முன்னேற்றத்திற்தும் வழி வகுக்கும்.

இவ்விதம் ஒற்றுமைப்பட்டவோர் இலங்கை, பொருளாதாரத்துறையில் உண்மையான முன்னேற்றம் கண்டு, உற்பத்தி அதிகமாக்கி, பொருளாதார நன்மையைப் பெருக்கலாம்"

### அன்றும் இன்றும்

1505ம் ஆண்டில், முதல் முறையாக மேற்கத்திய வல்லரசு ஒன்று இலங்கையில் கால் வைத்தபோது, கண்டிய, கீழைத்தேய, தமிழக ராசதானிகளான மூன்று வெவ்வேறு ராசதானிகளாக இலங்கை பிரிந்திருந்தது.

இன்றைய போக்குக்கேற்ப, இத்தகைய மூன்று வெவ்வேறு அங்கங்களைக் கொண்ட ஓர் சமஷ்டி அரசியலமைப்பே ஒற்றுமை இலங்கையைச் சிருஷ்டிக்க முடியும்.


ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.


# 'புகழ் பெற்ற தலங்களுள்ள இடங்களைப் புனித நகராக்குக'

## அ. இ. த. பே. வாலிப முன்னணி பிரதமரிடம் வேண்டுகோள்

'இந்துக்களின் வணக்கத்திற்குரிய இடங்களான கோணேசர் ஆலயத்தையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் அதனைச் சார்ந்த இடங்களையும், கிறிஸ்தவர்களின் வணக்கத்திற்குரிய முக்கிய தலங்களில் ஒன்ருன மடுவையும் அதனைச் சார்ந்த இடத்தையும் புனித நகரங்களாகப் பிரகடனப் படுத்தவும்.'

இவ்வாறு கடந்த 7ம் திகதி கூடிய அகில இலங்கைத் தமிழ் பேசும் வாலிப முன்னணியின் பொதுக் கூட்டம் பிரதம மந்திரியைக் கேட்டுள்ளது.

மேலும் அத்தீர்மானம் கூறுவதாவது: இந்துக்களின் முக்கிய பாடல் பெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற தலம் திருகோணமலையிலுள்ள கோணேசர் ஆலயம். மேற்படி தல மகிமையால் திருக்கோணமலையையும், அதே சிறப்புவாய்ந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தினுல் அதனைச் சார்ந்த இடத்தையும், கிறிஸ்தவர்களின் முக்கிய தலங்களில் ஒன்ருன மடுவையும் அதனைச் சார்ந்த இடத்தையும், இந்துக்களினதும், கிறிஸ்தவர்களினதும், தமிழ் பேசும் மக்களினதும் கலை, கலாச்சாரங்களைப் போற்றும் முகமாக அவைகளையும் "புனித நகர்" களாகப் பிரகடனப் படுத்தும் வண்ணம் பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்வதென்று அ. இ. த. பே. வா. முன்னணியின் பொதுச் சபை முடிவு செய்துள்ளது.

இதில் அரசாங்கத்தை மேலும் ஊக்குவிக்குமுகமாக அகில இலங்கையிலுமுள்ள தமிழ்ச் சங்கங்கள், சைவ பரிபாலன சங்கங்கள், கிறிஸ்தவ சங்கங்கள் யாவற்றையும் கருத்து வேறுபாடின்றி மேற்படித் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி, இதில் எங்களோடு சேர்ந்து ஒத்துழைக்க முன்வருமாறு வேண்டுகிருேம்.

### இன வெறியர்களுக்கு நல்ல படிப்பினை

சென்ற மாதம் நடந்தேறிய மாத்தளை நகர சபைத் தேர்தலில், இரண்டாவது வட்டார உறுப்பினராக திரு. எஸ். வி. நடராசா 200 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வட்டாரத்தில் பல ஜாதி மத மக்களும் உள்ளனர். என்ருலும் இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிங்கள அன்பரைத் தோற்கடித்து வெற்றி யீட்டியமை பாராட்டக் கூடியது.

சாதி, மத வெறி பிடித்தலையும் இன்றைய ஆட்சியாளருக்கும் கே. எம். பி. இராசரத்தின கோஷ்டிக்கும் இந்த வெற்றி நல்லதொரு படிப்பினையாகும்.

## உண்மைதானு?

அண்மையில் விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு நடன நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கவந்திருந்த மந்திரி திரு. கலுகல்லைக்கு அருகிலேயே இருந்து ஒரு புகைப்படம் பிடித்துக் கொள்ள ஒருவர் முன்னேற்பாடு செய்து கொண்டாராம். இப்படத்தை ஒரு தினசரியில் பிரசுரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும் பத்திரிகையில் பிரசுரமாகாது போய்விட்டது.

அமைச்சருக்கு அருகில் அமருவதற்காக முண்டியடித்து இடறி விழுந்து முன்னேடிய விவகாரம் பத்திரிகை நிர்வாகிக்குத் தெரியவந்துவிட்டது. உடனே பிரசுரிக்கக் கூடாது என்று உத்தரவிட்டு விட்டாராம் என்று பத்திரிகாலயச் செய்தி ஒன்று கூறுகிறது.

சம்பந்தப்பட்டவர் பத்திரிகையில் முக்கியமான பதவியிலிருந்தும் தமது முயற்சி பலிக்காமல் மூக்கறுபட்டிருக்கிருர்.

இச் செய்தியை மறுக்க முடியாதபடி போதுமான ஆதாரங்களும் அதற்கான படமும் நமது நிருபரிடம் சிக்கியுள்ளன.

# ஆட்சி மொழி அலுவல்களில் அலங்கோலம்

## அடையாளச் சீட்டில் ஆள் மாருட்டம்

அடையாளச் சிட்டுக் கோரி விண்ணப்பித்த இரு மாணவர்களுக்கு, அடையாளச் சிட்டுக்கள் சிங்களத்தில் அனுப்பப்பட்டது மட்டுமல்ல அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக அவர்களின் புகைப் படங்களும் மாற்றப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்று அஞ்சல் திணைக் களத்தில் நடந்துள்ளது.

அடையாளச் சிட்டுக் கோரி கரவெட்டியைச் சேர்ந்த ஏ. கைலாயநாதன், பி. கிருஷ்ணபிள்ளை என்னும் இரு மாணவர்கள் அஞ்சல் பகுதி அதிகாரிக்கு ஆங்கிலத்தில் விண்ணப்பம் செய்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அடையாளச் சீட்டுகள் சிங்கள மொழியில் இருந்தனவாம்.

சிங்களத்தைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தவித்த அவ்விருவருக்கும் மேலும் ஒரு சோதனை காத்திருந்தது. கைலாயநாதனின் புகைப்படத்தைக் கிருஷ்ணபிள்ளைக்குரிய அடையாளச் சீட்டிலும், கிருஷ்ண பிள்ளையின் புகைப் படத்தைக்கைலாயநாதனுக்குரிய அடையாளச் சீட்டிலும் மாறி இணைத்து அனுப்பியிருந்தார்கள் அஞ்சல் திணைக்களத்தினர். ஆனல் அடையாளச் சீட்டுக்கள் புகைப்படத்திற்கு உரியவருக்கே சரியான முறையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

பிறப்புத் தேதியில் பிழை ஏற்பட்டிருப்பதைக் கொண்டே இவர்களால் தவறு ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. மீண்டும் அஞ்சல் பகுதி அதிகாரிக்கு அவர்கள் தவறைச் சுட்டிக் காட்டியும், அடையாளச் சீட்டை ஆங்கிலத்தில் தரும் படியும் விண்ணப்பித்துள்ளார்கள் என்று தெரிகிறது.

அடையாளச் சீட்டுக்கள் சிங்களத்தில் வழங்கப்படுவதைக் கண்டித்து இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சீ. மு. இராசமாணிக்கம் அஞ்சல் திணைக்களத் தலைவருக்குப் பல கடிதங்கள் எழுதியதையும் நேரில் குறைகளை எடுத்துக் கூறியதையும் முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

தமிழ் மொழியை ஒழித்து ஆட்சி மொழியை அமுல் நடத்தும் ஆட்சியாளரின் திறமைக்கு இச்செயல் ஒரு எடுத்துக்காட்டாகும்.

# எல்லாம் இலங்கையர் மயத் திட்டம்

## அரசாங்கத்தின் சதிச் செயலாகும்

## நாட்டின் சகல துறைகளிலும் சமபங்கு கேட்டெழுவோம்!

—எல்லாளன் (துணைச் செயலாளர், இ. தொ. க.)—

**எல்லாம் இலங்கையர் மயம் என்ற திட்டமும் தோட்டப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டமும் நடைமுறைக்கு வருமானல் அரசாங்க அலுவலகங்களிலும் தனியார் வர்த்தக துறைகளிலும் சிங்களவர்கள் மட்டும்தான் வேலை செய்ய முடியும். பிரஜா உரிமையில்லாத மலைநாட்டுத் தமிழர்கள் கடைகளில் கூட வேலை பார்க்க முடியாது. செய்யும் வேலைகளையும் இழக்க நேரிடும்.**

இலங்கைத் தமிழ் பேசும் மலைநாட்டுத் தொழிலாளர்களாகிய நமது வாழ்க்கை நாளுக்கு நாள் தேய் பிறை போல் தேய்ந்துகொண்டு வருகின்றது! நமக்கு பிரஜா உரிமை இல்லை! வாக்குரிமை இல்லை! மொழி உரிமை இல்லை! பொருளாதாரத்திலும், கல்வி, கலை, கலாச்சாரம் முதலிய எல்லாத் துறைகளிலும், இந்நாட்டில் வாழும் மற்ற சமுதாயங்களிலும் பார்க்க மிகவும் கீழான நிலையிலிருக்கின்றோம்.

இந்தச் சமயத்தில் தான் இந்நாட்டை ஆட்சி புரியும் பெரும்பான்மையினரின் அரசாங்கம் நமக்குப் பெரும் அநீதி விளைவிக்கும் திட்டங்களைத் திட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

### மலை நாட்டில் சிங்களக் குடியேற்றம்

“இலங்கையில் எல்லாத் துறைகளிலும் பிரஜா உரிமை உள்ளவர்களுக்கு மாத்திரம்-அதாவது சிங்களவர்களுக்கு மட்டுமே உத்தியோகம் அளிக்க வேண்டும்” என்ற முடிவுக்கு வந்திருக்கின்றார்கள். இது மட்டுமா?

தேயிலை தோட்டங்களில் சிங்கள கிராமவாசிகளைக் குடியேற்றுவதற்கும் ஆளும் வர்க்கத்தினர் தீர்மானித்துள்ளனர். பதுளை, நுவரெலியா, கண்டி முதலிய மாவட்டங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் தேயிலை பயிரிடப்படாத நிலங்களை அரசாங்கம் எடுத்து அந்த நிலங்களில் சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டமிட்டுள்ளனர்.

பரம்பரை பரம்பரையாக இந் நாட்டின் வளத்திற்கும் இந் நாட்டின் நலத்திற்கும் உழைத்த தமிழன் வாழ்வு அஸ்தமிக்கப் போகின்றது. இது நியாயமா? நீதியா? ஜனநாயக முறைக்கு ஏற்றதா?

எனவே இன்றே “பிரஜா உரிமை உள்ளவர்களுக்கே உத்தியோகம்,” “தோட்டப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம்” என்ற ஆளும் வர்க்கத்தினரின் சதிச் செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும். எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

### அன்றே கிளர்ச்சி செய்திருந்தால்...

மலைநாட்டுத் தமிழர்களுக்காக இன்று நீலிக் கண்ணீர் வடிக்கும் தொண்டமான், அஸீஸ் போன்ற தலைவர்கள் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட அன்றே கிளர்ச்சி செய்திருந்தால், எதிர்த்துப் போராடியிருந்தால், இன்று இந்த இழிநிலை ஏற்பட்டிருக்காது. அப்பொழுதே வெகுண்டெழுந்திருந்தால்--அன்றே விழித்திருந்தால் இந்த அவல நிலை நிச்சயமாக ஏற்பட்டிருக்காது. தங்களுடைய தலைமைப் பதவிக்காக் அப்பாவி மக்களைக்காட்டிக் கொடுத்துவிட்டார்கள் காங்கிரஸ் தலைவர்கள்.

ஆனல் தமிழனின் தன்மான உணர்ச்சி தணிந்துவிடவில்லை, தமிழனது வீரம் மங்கிவிடவில்லை. மலைநாட்டுத் தமிழனின் எழுச்சி ஒரு மாபெரும் இனத்தின் விடுதலை உணர்ச்சியாகும், நம்மை அடக்கி வைத்திருந்ததினாலும், சரியான தலைமை அமையாததினாலும் ஆளும் வர்க்கத்தினர் இதுவரைக்கும் தங்களின் ஆதிக்கத்தை, ஏகாதிபத்திய வெறியை நிலைநாட்டி வைத்திருந்தனர்.

மானமே பெரிதென வாழ்ந்தவர்கள் நம் மூதாதையர்கள். அவர்களின் வழி வந்த நமக்கு இன்று தக்க வேளை வந்துவிட்டது.

### சம பங்கு வேண்டும்!

நாம் வீறு கொண்டு எழ வேண்டும். இழந்த உரிமைகளை மீண்டும் பெற வேண்டும். இந்நாட்டை ஆளும் உரிமையில் நமக்கும் சம பங்கு வேண்டும் என்று நாம் பரணி பாட வேண்டும். அந்தப் பரணி இந்தத் தரணி எல்லாம் ஒலிக்க வேண்டும் என்ற உன்னத கொள்கை உடைய ஒரு கட்சி இன்று இந்த நாட்டில் உண்டு என்றால் அது இலங்கைத் தமிழரசுக் கட்சியாகத்தான் இருக்க முடியும்.

இன்று நமது உயர்வுக்காகவும் நன்மைக்காகவும் போராட இ. த. அ. கட்சியின் ஆதரவில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் கழகம் தயாராக இருக்கின்றது.




## மலைச்சாரலிலே முத்தமிழ் விழா

5-7-63-ல் நுவரேலியா புனித சவேரியார் கல்லூரி தமிழ் மாணவ மன்றத்தினரால், பேதுருதால காலை மலைச்சாரலிலே— பு. ச. கல்லூரியில் நுவரேலியா வித்தியாதரிசகர் திரு. எம். குணரத்தினம் தலைமையின் கீழ் முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது.

பிற்பகல் இரண்டு மணிக்கு தமிழ் மொழி வாழ்த்துடன் விழா ஆரம்பமானது. பின் வரவேற்புரையும், தலைமைப் பேருரையும் அளிக்கப்பட்டன.

அதையடுத்து, கலாநிதி சு. வித்தியானந்தன் சொற்பொழிவாற்றினர். அவர், தனது சொற்பொழிவில், பண்டைத் தமிழரின் பெருமையையும், வீரத்தையும், மான உணர்ச்சியையும் எடுத்தியம்பி, இன்று உரிமையிழந்து கிடக்கும் தமிழ் மொழியை அடிமைத் தளையிலிருந்து மீட்டிட வேண்டுமென அறை கூவினர்.

அடுத்து, திரு. இரா. சிவலிங்கம் எம். ஏ. “தமிழ் இலக்கியம்” என்ற தலைப்பின் கீழ் உரையாற்றினர். அவர் தமதுரையில், பண்டைப் புலவர்கள் மலருக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும், நால்வகை நிலங்களும் மலர்களைக் கொண்டே பிரிக்கப்பட்டன என்பதையும், மங்கை, மன்னர், குழந்தை ஆகியோருக்கு மலர்களைக் கவிஞர்கள் உவமைப் படுத்திப் பாடியிருக்கிறார்கள் என்பதையும் தெளிவாகவும், விரிவாகவும் மொழிந்தார்.

அதன்பின் விழாவிற்காக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நுவரெலிய வித்தியாதரிசகரால், வெள்ளிக் கிண்ணங்களும், புத்தகங்களும் பரிசில்களாக வழங்கப்பட்டன. அதையடுத்து, பரிசு பெற்ற பாடல்களும், உரைகளும் இடம் பெற்றன. ஆசிரியர், அமிர்தநாதர் அவர்கள் நன்றியுரை கூறினர். அவருடைய நன்றி நவிலலுக்குப் பின் தேநீர் விருந்தும், நடன-இன்னிசை விருந்தும் அளிக்கப்பட்டன.


கடைசியாக, “சாம்ராட் அசோகன்” என்ற ஓரங்க நாடகம் இடம் பெற்றது.

## கொழும்பில் ரொக்கெட்!

கொழும்பில் சென்ற புதன்கிழமை மாலை, தெருவில் சென்று கொண்டிருந்தவர்களெல்லாம் மேலே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடி நின்றனர்.

வான மண்டலத்திலே அதி விசையுடன் பறந்து சென்ற ஒரு கருவியே இதற்குக் காரணம். மின்னல் போல் பறந்துசென்ற இந்தக் கருவி ஒரு ரொக்கட்டாக இருக்கலாம் என்றே அநேகர் கருதினர்.

ஆனல், அது ஒரு ஜெட் விமானம் என்று பின்னர் தெரிய வந்தது.

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கை வாய்ந்த பம்ப்.

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ருேக் பெற்ருேல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கைஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்- மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மொடல்- மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்- மணித்தியாலம் 4800-16809 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.

ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி

ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ்.
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ.
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எவ். நாகலிங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ.
வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

**கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,**

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெறறது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.]

தபாற் பெட்டி இல: 33. கொழும்பு-2.

காட்சி அறை : சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை. போன்: 79351.

# இந்தி எதிர்ப்பு வலுப் பெறுகிறது

# தி. மு. க. வெற்றி தரும் பாடம்

## துரோகச் செயலைத் துடைக்க கொம்யூனிஸ்டுகள் கயமைத்தனம்

### காங்கிரஸ் கட்சிக்குள் பூசல்

இந்தியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர், தமிழ் நாட்டில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் திருவண்ணமலை சட்டசபைத் தொகுதித் தேர்தல் முக்கியமானது என்பது தென்னுட்டு அரசியல் வட்டாரங்களின் கருத்து. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருந்த இத் தொகுதியில் 1962ல் நடந்தபொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தது. இப்பொழுது நடைபெற்ற இடைத்



தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு

தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதை மீண்டும் கைப்பற்றியுள்ளது.

#### முக்கியத்துவம் பெற்ற இடைத் தேர்தல்

இந்த இடைத் தேர்தல் பல துறைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்கியுள்ளது. காரணம்? திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் போட்டியிட்ட கட்சியோ ஆளும் கட்சியான காங்கிரஸ். மேலும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கட்சி, பெரியாரின் திராவிட கழகம், ம. பொ. சிவஞானத்தின் தமிழரசுக் கழகம், தமிழ் தேசியக் கட்சி ஆகியனவும் கழகத்திற்கு எதிராகத் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தன. கழகத்திற்கு ஆதரவாக ராஜாஜியும், முஸ்லிம் லீக் பிரமுகர்களும் ஓரிரு தடவைகள் சென்று பிரசா

**பூங்குன்றன்**

ரம் செய்திருந்த பொழுதிலும், திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து நின்றே இவர்களை எதிர்த்துப் போராடியுள்ளது.

#### இந்திக் கிளர்ச்சியும் தேர்தல் முடிவும்

தென்னுட்டில் தோன்றியிருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் வளர்ச்சி எத்தகையது என்பதையும் மக்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தயாராகி வருகிருர்களா என்பதையும் டெல்லி ஆட்சி பீடத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கு ஒரு கருவியாகவும் இத்தேர்தல் அமைந்தது.

பிரிவினைச் சக்திகளுக்கு எதிராக டெல்லி அரசு கொண்டு வந்துள்ள புதிய திட்டத்திற்கு பலப் பரீட்சை பார்க்கும் களமாகவும் இத்தேர்தல் அமைந்திருந்தது.

அடுத்து இந்தியா முழுவதும் விதிக்கப்பட்டுள்ள தங்கக் கட்டுப்பாடு பற்றி மக்களின் மனுேநிலையை தெரிந்து கொள்ளவும் ஆளும் கட்சி இத்தேர்தலைப் பயன்படுத்தியுள்ளது.

#### ஆட்சியாளருக்கு அதிர்ச்சி

தேர்தல் முடிவு ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பது பற்றி நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. தென்னுட்டு மக்களை இன்னும் டெல்லி அரசு ஆட்டிப் படைக்க முடியாது என்பதை பகிரங்கமாகவும் பட்டவர்த்தனமாகவும் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டியுள்ளது. எனவே இந்த வெற்றி இந்தி எதிர்ப்பாளர்களின் வெற்றி, பிரிவினை தடைச்சட்ட எதிர்ப்பாளர்களின் வெற்றி என்று கூறிக்கொள்வதில் எந்தவித தவறும் இல்லை.

#### உரிமைப்போரை உலகறியச் செய்த தேர்தல்

தென்னுட்டு மக்கள் இந்தியை எதிர்த்து விரட்டத் தயாராகி விட்டார்கள் என்பதை டெல்லி ஆட்சியாளருக்கு மட்டுமல்ல அகிலத்



தமிழ் நாட்டுச்சட்டசபை எதிர்க் கட்சித் தலைவரும் தி. மு. க. தலைவர்களில் ஒருவருமான திரு. இரா. நெடுஞ் செழியன்.

திற்கும் எடுத்துக் காட்டியுள்ளது திருவண்ணமலைத் தேர்தல் முடிவு—திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி.

#### திரை மறைவில் சூழ்ச்சி

தேர்தலின் போது இந்தி எதிர்ப்பாளர்களின் சக்தியை முறியடிக்க—திராவிட முன்னேற்றக் கழகத்தை முறியடிக்க எத்தனையோ சூழ்ச்சிகள் திரை மறைவில் நடைபெற்றதாக அறியப்படுகின்றது. கழகத்தை எதிர்த்து நின்று ஆளும் கட்சியான காங்கிரஸ், ஆளும் கட்சி என்ற அதிகாரத்தைப் பாவித்துப் பல தில்லு முல்லுகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. 'அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கும் பொழுது, யுத்த நிலை சீர்படவில்லை என்று சொல்லிக்கொண்டே ஒரு துணைத் தேர்தலுக்குச் சர்க்காரின் முழு மந்திரிகளும் ஓய்வில்லாமல் அலைவது என்றுல் என்ன ஜனநாயகமோ தெரியவில்லை' என்ற அபிப்பிராயம் பொது மக்கள் மத்தியில் உள்ளது என்றும் தெரிகிறது.

#### கொம்யூனிஸ்டுகளின் பச்சைத் துரோகம்

அடுத்து காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக-காங்கிரஸ் கட்சியிலும் பார்க்கத் தீவிரமாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த கொம்யூனிஸ்டுக் கட்சியின் துரோகத்தனத்தை பாரத மக்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்கள் நன்கு தெரிந்திருக்கிருர்கள். கொம்யூனிஸ்டுகளின் துரோகத்தனத்தை—ஈனச்செயலை நன்கு தெரிந்து தான் போலும், தேய்ந்த துடைப்பத்தைப் போல கொம்யூனிஸ்டுக் கட்சியை மூலையில் தூக்கி யெறிந்துள்ளார்கள். இந்த நிலையில் உள்ள கொம்யூனிஸ்டுக் கட்சிதான் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டது. சீன இந்திய எல்லைப் போரில் கொம்யூனிஸ்டுக் கட்சி நடந்து கொண்ட தாசித்தனமான போக்கிற்குப் பிராயச்சித்தமாக இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளது போலும்.

இல்லாவிடின் தென்னுட்டு மக்களின் உரிமைக் கிளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கப் போகும் எதிர்கால நடவடிக்கையின் முயற்சியோ தெரியவில்லை. எதற்காக கொம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்க வேண்டும் என்பது புரியவில்லை.

காங்கிரஸ் கட்சி நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ள புதியவரி முறைகளை, கட்டாய சேமிப்புத் திட்டத்தை, தங்கக் கட்டுப்பாட்டை எதிர்க்கிற கொம்யூனிஸ்டுக் கட்சி எதற்காக காங்கிரசை ஆதரிக்க வேண்டும்?

#### எதற்காக ஆதரிக்க வேண்டும்?

கொம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் தாசித்தனத்தாலேயே இன்று பாரதம் முழுவதும் அவசரகால நிலை. அவசரகாலச் சட்டத்தின் துணை கொண்டு-இன்றும் பல கொம்யூனிஸ்டுப் பெருந்தலைகள் தடுப்புக் காவலில் உள்ளனர். அப்படி இருக்கையில் எதற்காக கொம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசை ஆதரிக்க வேண்டும்?

கொம்யூனிஸ்டுக்கட்சியின் கூடப்பிறந்த் தோஷம் இது. சுதந்திரப் போராட்ட காலத்தில் அதற்கு எதிர்ப் பிரசாரம், ஆங்கிலேயருடன் ஆலிங்கனம். சீன-இந்திய எல்லைத் தகராறில் சீனர்களுடன் காதல் மொழி. இன்று தென்னுட்டு மக்கள் உரிமைப் போர்-எனவே காங்கிரசாருடன் கூட்டு. இவர்கள் எங்கிருந்தாலும் இத்தகைய துரோகச் செயல்களில் ஈடுபடாமல் இயங்க முடியாது போலும்.

#### கேரள காங்கிரஸில் வெடிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியும் அதன் மூலம் தென்னுட்டில் வளர்ந்துவரும் இந்தி எதிர்ப்பும் ஒரு புறம் ஆளும் கட்சிக்கு அதிர்ச்சியைக் கொடுக்கையில்-தென்னுட்டின் மற்ருெரு மாகாணமான கேரள மாநிலத்தில் ஏற்பட்டிருக்

(9-ம் பக்கம் பார்க்க)




பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

**கமலா பீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**

தந்தி தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522


## சந்தியில்...

இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் ருஷ்ய-சீனக் கோஷ்டிச் சண்டை வலுத்துக் கொண்டுள்ளது. ருஷ்ய பொதுவுடைமைக் கொள்கையை, கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பொதுச் செயலாளர் பீட்டர் கெனமன், வி. ஏ. சமரவிக்கிரமா, தற்பொழுது மொஸ்கோவில் பயிற்சி பெறும் கே. பி. சில்வா, மாநகர சபை உறுப்பினர் ஜி. எஸ். ரட்ணவீர, எல். டபிள்யூ. பண்டித, ஏ. வைத்திலிங்கம், தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் எம். ஜி. மென்டிஸ், சமாதான சபைக் காரியதரிசி உடகந்த வெல சரணங்கதேரோ ஆகியோர் ஆதரிக்கின்றனராம்.

சீனுவின் பொதுவுடமைக் கொள்கையை திருமதி தேஜா குணவர்த்தன உட்பட இலங்கைத் தொழிற் சங்கச் சம்மேளனச் செயலாளர் என். சண்முகதாசன், பிரேம்லால் குமாரசிரி, சரத் முத்தேடுவகம, கொம்யூனிஸ்ட் வாலிப முன்னணியைச் சேர்ந்த என். எல். பெரேரா, எச். எம். பி. முகையதீன், ரத்னே தேசப்பிரிய சேனநாயக்கா, தர்மசிரி ஜெயக்கொடி, ருஷ்ய செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' ஸ்தாபனத்தைச் சேர்ந்த என். ஞானசுந்தரம் (பிரேம்ஜி), பி. லெவ்விட்டிகொட, சோவியத் தகவல் இலாகாவைச் சேர்ந்த சுனில் ஹேவாகே, கிழக்கு ஜெர்மன் வர்த்தகக் குழுவைச் சேர்ந்த திருமதி என். எல். பெரேரா ஆகியோர் ஆதரிக்கின்றனராம். ஒரே கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்தப் பாகுபாடு ருஷ்யாவும் சீனுவும் ஒன்று பட்டாலும் இங்கு ஒன்றுபடுமோ என்பது கேள்விக்குறி.

●

ருஷ்யாவுக்கு எதிராகச் சீனு இலங்கையில் செய்து வரும் பிரசாரத்துக்குப் பதிலளிக்கும் நோக்கத்துடன் சோவியத் தூதுவராலயம் ஒரு சிங்கள மாதச் சஞ்சிகை வெளியிடவிருக்கிறதாம்.

●

இந்திய-சீன எல்லைத் தகராறுகளையிட்டு மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்த இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரு நாட்டின் பிரதமர்களையும் இங்கு அழைத்துள்ளாராம்.

●

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆட்டிப் படைக்கும் கிறிஸ்டின் கீலர் என்ற அழகியுடன் ஜனுதிபதி அயூப்கான் நீந்தி விளையாடியதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தி பாகிஸ்தானிலும் அண்டை நாடுகளிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

—அம்மான்

# மாதளபதி மயிரிழையில் உயிர் தப்பினார்

## வேண்டாத அரசியல் அமைப்பை மக்கள் வெறுத்தனர்

'கோமகன்'
'மாமல்லன்'

### அரங்கம் 19

மன்சன் இல்லத்தைச் சுற்றி நின்ற நூற்றுக் கணக்கான பொலீஸாரும் இராணுவத்தினரும் நாள் முழுவதும் அங்கேயே நின்றனர். சின் பீன் வாதிகள் எவருமே அங்கு வருவதாகத் தெரியவில்லை. கடைசியில் ஏமாற்றத்துடன் அவர்கள் தத்தம் நிலையங்களுக்குத் திரும்பினர். அடுத்த நாட் பத்திரிகைகளில் சின் பீனின் ஆண்டுக் கூட்டம் பற்றிய செய்தி வெளியானது. அதன் படி குறிப்பிட்ட தினத்திற்கு முதல் நாளே கூட்டம் நடந்தேறியதாக அறியக் கிடந்தது. ஆட்சியினரும் அவர்களுடைய அடிமைகளான இராணுவத்தினரும் பொலீஸாரும் வெட்கத்தைத் தாங்க முடியாது சினம் கொண்டனர்.

லும் அடைத்து நிலத்தினுள் புதைத்து வைத்தார்.

அயர் நாட்டிலும் இங்கிலாந்திலும் சிறைச்சாலைகளில் மடங்கிக் கிடந்த சுதந்திர வீரர்கள் தப்பிச் செல்வது பற்றிச் சதா சிந்தித்து வந்தனர். இங்கிலாந்தில் மௌன்ற்ஜோய் சிறைச்சாலையிலிருந்து முன்னர் தப்பியவரும் 'அந்தோக்ளோ' ஆசிரியருமான பியராஸ் பீஸ்லாய், ஸ்திரேஞ்வேய் சிறைச்சாலையில் இருந்தார். அவருடன் ஓஸ்ரின் ஸ்ரக்கும் இன்னும் நால்வரும் சிறைவாசம் அனுபவித்தனர்.

## பொலீசார் கண்ணில் மண்ணைத் தூவிய விடுதலை இயக்க ஆண்டு விழா

அயர்நாட்டில் தொடக்கப்பட்ட கடன் நிதிக்குப் பணம் எல்லா மூலைகளிலுமிருந்து வந்து குவிந்தது. தொழிலாளிகளும் வணிகர்களும் பணத்தை வாரி இறைத்தனர். அயர் நாட்டின் விடுதலையை விரும்பிய ஐரோப்பிய நண்பர்களும் சீனு, இந்தியா, ஒளஸ்திரேலியா ஆகிய நாட்டு மக்களும் தென் ஆபிரிக்காவில் வாழ்ந்த அயர் இனத்தவர்களும் தம்மால் இயன்ற அளவு பணத்தை மைக்கேல் கொளின்ஸுக்கு அனுப்பினர். அயர் மன்றம் அயர் நாட்டில் எதிர்பார்த்த நிதி 2,50,000 பவுண். ஆனால் குறுகிய காலத்திலேயே 3,79,000 பவுண் சேர்ந்தது.

சேர்ந்த பணத்தைப் பத்திரமாக வைத்திருப்பதற்காகத் தேசிய காணி வங்கி அமைக்கப்பட்டது. ஆனால் இந்த வங்கியை அமைத்தவர்கள் அயர் மன்றத்தாரே என்பதை ஆட்சியினரோ பொது மக்களோ அறிந்திருக்கவில்லை. சேர்க்கப்பட்ட பணம் அனைத்தும் தனிப்பட்டவர்களின் பெயரில் இந்த வங்கியிலும் மற்றும் சில வங்கிகளிலும் போடப்பட்டது.

பணம் கிடைக்கத் தொடங்கியதும் அயர் வர்த்தகத்திற்கு ஆக்கம் அளிப்ப

ஸ்திரேஞ்வேய் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்வது மிகவும் சுரமம். சுற்றியுள்ள மதில்களிலெல்லாம் பேராணிகள் பொருத்தப்பட்டிருந்தன. மதில்களோ 40 அடி உயரமானவை. எனினும் மதிலின் ஒரு மூலையில் பேராணிகள் பொருத்தப்படவில்லை என்பதை பீஸ்லாய் கவனிக்கத் தவற

மாக வெளியேநின்றதொண்டர்களிடம் ஒரு கல்லை எறிந்தனர். உடனே கயிற்று ஏணியொன்று எறியப்பட்டது. அதன் மூலம் ஆறு கைதிகளும் ஏறி வெளிச் சுவரோடு வைக்கப்பட்டிருந்த மர ஏணியால் இறங்கினர். ஈருருளிகளிலும் வாடகைக் கார்களிலும் அவர்கள் அனைவரும் தப்பிச் சென்றனர்.

தப்பிச் சென்ற சுதந்திர வீரர்கள் புகைவண்டி மார்க்கமாக லிவப்பூள் துறைமுகத்தையடைந்தனர். அங்கிருந்து நீல் கேர் என்னும் சின் பீன் அனுதாபியின் உதவியுடன் டப்ளினையடைந்தனர். பியராஸ் பீஸ்லாய், டப்ளினை அடைந்தபின் தொண்டர் படையின் இரகசியப் பத்திரிகையான 'அந்தோக்ளோ' கிரமமாக வெளிவரத் தொடங்கியது.

அயர்நாட்டில் ஆங்கில ஆட்சியினரின் அக்கிரமம் கூடிக்கொண்டே வந்தது. ஆயிரக் கணக்கான வீடுகள் இராணுவத்தினராலும்

இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன. அவர் பிரயாணஞ் செய்வதும் பூரண பாதுகாப்போடுதான். ஆயினும் அவர் போகும் இடங்கள், பாதைகள், புகைவண்டிகள், நேரம் ஆகியவற்றின் விபரங்களைக் கொளின்ஸ் தனது உளவுப் படைமூலம் பெற்று வந்தார். மாதளபதியைக் கொல்வதற்காகத் தொண்டர்களைக் கைத்துப்பாக்கிகளுடனும் எறிகுண்டுகளுடனும் அனுப்பி வைப்பார். டப்ளினில் ஈருருளி பழுது பார்க்கும் கடையொன்றில் இரகசியமாகச் செய்யப்படுபவையே இந்த எறிகுண்டுகள். எறிகுண்டு

மாதளபதி வரும் வழியிலிருந்து வண்டியை அப்பால் இழுத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டார். இதைக் கேட்டதும் புதரில் ஒளிந்திருந்த தொண்டர் ஒருவர் பொலீஸ்காரருக்கு முன்னுல் எறிகுண்டு ஒன்றை வீசினுர்!

எறிகுண்டு வெடித்ததன் சத்தம் வீதியில் வந்து கொண்டிருந்த கார்களுக்குக் கேட்டது. முதலாவது கார் மின்னல் வேகத்தில் பறந்தது. அதன் வேகத்தைக் கண்ட தொண்டர்கள் அதை நோக்கியும் சுட்டனர். இரண்டாவது காரும் மின்னல் வேகத்தில் வந்தது. வண்டியை வீதியின்குறுக்கே தள்ள முடியவில்லை. எனினும் தொண்டர்கள் தமது படைத்துப்பாக்கிகளைச் சும்மா வைத்திருக்கவில்லை.

## விடுதலை நாட்டின் பொருள் வளம் சிறக்க நிதிக் குவியல்கள்

தயாரிப்பதற்காகப் பின்னர் தொழிற்சாலைகள்கூட இரகசியமாக அமைக்கப்பட்டன. மாதளபதியின் பிரயாணங்கள் கடைசி நேரத்தில் மாற்றமடைவதால் தொண்டர்களின் முயற்சி பலன் அளிக்கவில்லை.

ஒரு முறை பிரெஞ்சு பிரபு தனது நாட்டு மனைக்குப் போயிருப்பதாகவும் 19-12-1919ல் புகைவண்டி

கார் நிறுத்தப்படும் வரை அதை நோக்கிச் சுட்டனர். கார் நின்றதும் ஆவலுடன் ஓடிப்போய்ப் பார்த்தனர். ஆனால் அதில் சாரதி ஒருவர் தான் இருந்தார். முதல் காரிலேயே மாதளபதி காயமின்றித் தப்பிச் சென்று விட்டார்!

இரண்டாவது காரைத் தொடர்ந்து இன்னுமொரு கார் வந்தது. அதில் படைத்துப்பாக்கிகளும் ஏந்திரத் துப்பாக்கியொன்றும் தாங்கிய இராணுவத்தினர் வந்தனர். அவர்கள் தெருவில் நின்ற தொண்டர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனுல் தொண்டர் ஒருவர் மரணமடைந்தார். எனினும் இந்த நிகழ்ச்சியையடுத்து ஆங்கில மாதளபதி புகைவண்டியிலோ சாதாரணக் கார்களிலோ பிரயாணஞ் செய்வதை நிறுத்தினுர்; கவசம் பூட்டப்பட்ட காரிலேதான் பிரயாணஞ் செய்யத் தொடங்கினுர்.

பணம் திரட்டுவதற்காகவும் பிரசாரம் செய்வதற்காகவும் அமெரிக்கா சென்ற குடியதிபதி டி வேலரா ஓய்வின்றி நாடெங்கும் பிரயாணஞ் செய்தார். அயர் மக்களுடைய சுயநிர்ணய உரிமை பற்றியும் பரிஸில் கூடிய வல்லரசுகள் அமைக்க எண்ணிய நாடுகள் கழகம் பற்றியும் உரைகள் நிகழ்த்தி




வில்லை. இவை பற்றி அவர் கொளின்ஸுடன் தொடர்பு கொண்டார். கொளின்ஸும் மாறு வேடத்தில் சிறைச்சாலைக்கு வந்து போனுர். திட்டங்கள் தீட்டப்பட்டன. செய்திகளும் அவசியமான கருவிகளும் 'கேக்'கினுள்ளும் 'ஜாமி'னுள்ளும் 'பட்டரி'னுள்ளும் வந்து சேர்ந்தன.

## அடக்குமுறைப் பேயாட்டம்

தற்காக அயர் மன்றத்தார் வெளிநாடுகளில் சார்பாளர்களை நியமித்தனர்; மீனவர் மத்தியில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினர்; தேசிய குடியியல் சேவையொன்றை ஏற்படுத்தினர்; நடுவர் சபைகளை நிறுவி மக்களுக்கு நீதி வழங்கினர். இவை அனைத்தும் ஆங்கில ஆட்சியில் சட்டவிரோதமானவை. ஏன், அயர் மன்றம் கூடச் சட்டவிரோதமாக்கப்பட்டுத்தானே உள்ளது. ஆனுல் அயர் மக்கள் இந்தச் 'சட்ட விரோத'ச் செயல்களைச் செய்வதில் மகிழ்ச்சி கண்டார்கள்.

மைக்கேல் கொளின்ஸ் இவற்ருேடு நிற்கவில்லை. தங்கச் சேமிப்பு ஒன்றை ஏற்படுத்தினுர். ஈஸ்ரர் வாரப் புரட்சிக்கு முன்னர் சோண் மக்டயாமடா தொடங்கிய தங்கச் சேமிப்பு இவருக்கு முன் மாதிரியாக இருந்தது. 25,000 பவுண் பணத்தைத் தங்கமாகச் சேமித்து அதைப் பெட்டிகளிலும் சவப்பெட்டி ஒன்றி

11-10-1919ல் தப்பிச் செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனுல் அன்று சூழ்நிலை சாதகமாக இருக்காததினுல் 25-10-1919ல் தப்பிச் செல்வதென இறுதியாக முடிவு செய்யப்பட்டது.

மாலை 5-00 மணியாகியதும் தப்ப உதவி செய்யும் தொண்டர்கள் மதிலில் பேராணிகள் பொருத்தப்படாத பகுதிக்கு அண்மையில் வந்து நின்றனர். ஒஸ்ரின் ஸ்ரக்கும் பியராஸ் பீஸ்லாயும் மற்றவர்களும் காவல் காத்துக் கொண்டு நின்ற ஒரே ஒரு காவலரைப் பிடித்து அவரது கைகளையும் கால்களையும் கட்டி வாயினுள் சீலைத்துணிகளை அடைகினர். அவரைச் சிறைச்சாலைச் சிற்றறையுள் போட்டுப் பூட்டினர். அதன்பின் எல்லாரும் தயார் என்று சைகை கொடுக்கும் வித

பொலீஸாராலும் சோதனையிடப்பட்டன; கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. தெருவில் சென்ற பெண்களும் சிறுர்களும் உதைத்துத் துரத்தப்பட்டனர். இவற்றையெல்லாம் ஆட்சியினர் செய்ததின் காரணம் மக்களை ஆத்திரத்துக்குள்ளாக்கி இன்னுமொரு இரத்தப் புரட்சியைத் தூண்டி அதனைக் காரணமாகக் கொண்டு தலைவர்களைச் சுட்டுக்கொல்ல விரும்பியமையே. இவை அனைத்துக்கும் தூண்டுதலாக இருந்தவர் அயர் நாட்டில் ஆங்கில ஆட்சியின் இராணுவ மாதளபதியாக

### அடுத்த வாரம்

- ★ 'சோசலிஸ்டு' வந்தார்
- ★ ஐந்தாம் படை
- ★ கொலைகாரக் குழு

இருந்த பிரெஞ்சு பிரபுவே. பொலீஸ் உளவு அதிகாரிகளைச் சுட்டுத் தள்ளத் திட்டம் வகுத்த மைக்கேல் கொளின்ஸ் இவரையும் ஒரு கைபார்க்க முடிவு செய்தார்.

### அரங்கம் 20

இராணுவ மாதளபதியின் பிரயாணங்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் மிகவும்

மூலம் ஆஷ்ரௌண் நிலையத்தையடைந்து காரில் டப்ளினுக்குத் திரும்புவார் என்றும் மைக்கேல் கொளின்ஸ் அறிந்து கொண்டார். ஆஷ்ரௌணிலிருந்து டப்ளினுக்குச் செல்லும் வீதியின் ஓரத்தில் 11 தொண்டர்களைப் படைத்துப்பாக்கிகளுடனும் எறிகுண்டுகளுடனும் நிறுத்தினுர். முதலில் வரும் கார் வழிகாட்டிக் காராக

## சட்ட விரோதச் செயல் தலைவிரி கோலம்

இருக்கும் எனவும் அடுத்து வரும் காரில்தான் மாதளபதி வருவார் எனவும் அந்தத் தொண்டர்கள் எண்ணினர். அதன்படி முதலாவது காரை எதுவித தடையுமின்றிப் போகவிட்டு, வண்டியொன்றை வீதிக்குக் குறுக்கே தள்ளி இரண்டாவது காரை நிற்பாட்டி பிரெஞ்சு பிரபுவைக் கொல்வதெனத் தீர்மானித்தனர்.

வண்டியை வீதிக்குக் குறுக்கே தள்ளுவதற்காக மூன்று தொண்டர்கள் தெருவோரத்தில் நிற்க மற்றவர்கள் படைக்கலங்களுடன் புதர்களில் ஒளித்திருந்தனர். அப்பொழுது ஒரு பொலீஸ்காரர் அங்கு வந்து, தெருவில் நின்ற தொண்டர்கள் யாரோ நாட்டுப் புறத்தார்கள் என்று எண்ணி அவர்களை 'மேன்மை தங்கிய'

னுர். அமெரிக்காவில் அயர் நாட்டின் தூதுவரான டாக்டர் பட்றிக் மக்காட்டன், மற்றும் அயர் மன்ற உறுப்பினர்களான லயம் மெலோவ்ஸ், ஹறி போலண்ட், நாடு கடத்தல் உத்தரவு பெற்ற டயாமுட் லிஞ்ச் ஆகியோர் குடியதிபதிக்கு உதவியாக இருந்தனர். இன்னும், அயர் நாட்டிலிருந்து ஜேம்ஸ் ஓமாரா வரவழைக்கப்பட்டார்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள், அமெரிக்கக் குடியதிபதி வில்சன் அயர் குடியரசை அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தன. தொழிற் சங்கங்கள் என்ன, அமெரிக்க மூதவை கூட அவ்வாருன வேண்டுகோள் ஒன்றைச் சில மாதங்களுக்கு முன்னர் விடுத்திருந்தது. டி வேலராவின் பிரசாரத்தை எதிர்ப்பதற்காக ஆங்கில அரசாங்கம் எழுத்தாளர்களையும் பிரசுரகாரர்களையும் ஊக்குவித்தது. ஆனுல் பொங்கி எழும் இன உணர்வுக்கு எதிரே இவர்கள் எம்மாத்திரம்?

(15-ம் பக்கம் பார்க்க)

## விடுதலை வேட்கையைத் தடுக்க எழுத்தாளர்கள் பயன்படுத்தப்பட்டனர்

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூலை மாதம் 14-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# வெளியேற வேண்டாம் !

**1964** ஜனவரி தொடக்கம் அரசாங்க அலுவல்கள் அனைத்தும் சிங்களத்தில் மட்டுமே நடைபெறுமாம்.

இது ஓர் எதேச்சாதிகாரமான நடவடிக்கை, கண்மூடித்தனமான செயல், மூர்த்தண்யமான மொழித் திணிப்பு. சிறுபான்மையோரை நசுக்கும் நேரடி நடவடிக்கை. இந் நடவடிக்கையால் இன்று நேரடியாகப் பலிவாங்கப்படுபவர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களே.

"சிங்களத்தில் கருமமாற்று—இன்றேல் இளைப்பாறு" என்கிறது அரசாங்கம். அரசாங்க சேவையிலிருந்து தமிழர்களை விரட்டும் முயற்சி இது. தமிழர் என்ற காரணத்துக்காக ஊழியர்களில் ஒரு பகுதியினரை வஞ்சம் தீர்ப்பது ஜனநாயக ஆட்சிமுறைக்கு நேர்முரணான செயல். இந்த அநீதியான இழிசெயலால் தமிழ் ஊழியர்களில் அநேகர் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். அவர்களிடையே வெறுப்பும், அதிருப்தியும், அவநம்பிக்கையும் வளர்ந்துள்ளன.

சம்பள உயர்வோ பதவி உயர்வோ கிடையாதெனக் கூறி அரசாங்கம் தங்களைப் பலிவாங்கத் தொடங்கிவிட்டதால், இந்த ஊழியத்துக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடச் சிலர் கருதுகின்றனராம். இளைப்பாறும் வாய்ப்பைப் பயன்படுத்தலாமென்பது அவர்களின் எண்ணம்.

**அரசாங்கத்தின் தூண்டுதலுக்கேற்ப இவ்வருட இறுதிக்குள் இளைப்பாறலாமென்று கருதும் அரசாங்க ஊழியர்களுக்கு நாம் திட்டவட்டமாகக் கூறுகின்றோம், அரசாங்க சேவையிலிருந்து வெளியேற வேண்டாம், வேண்டாம், வேண்டாம் என்று.**

பல்வேறு உபாயங்களைக் கையாண்டு தமிழர்களை அரசாங்க சேவையிலிருந்து வெளியேற்றவேண்டும்—அந்த இடங்களில் வேலையின்றித் திண்டாடும் சிங்களவர்களைக் கொண்டு வந்து திணிக்க வேண்டும் என்பது ஆட்சியாளரின் சதித்திட்டம். இச்சதிக்குத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பலியாகப் போகின்றனரா? "தமிழர்களை விரட்டிவிட்டோம். அவர்களின் உத்தியோகங்களைப் பிடுங்கிச் சிங்களவர்களுக்குக் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துவிட்டோம்" என்று அவர்கள் சிங்களவர் மத்தியில் நாளை பிரசாரம் செய்வார்கள். இதன் மூலம் சரிந்துவரும் தங்களின் ஆட்சிக்குப் புத்துயிரளிக்கலாமென்பது அவர்களின் எண்ணம். தமிழருடன் சிங்களவர்களை மோதவிட்டு, வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிட்டால் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, வேலையின்மை முதலிய நெருக்கடிகளை மறைத்துவிட முடியுமென்பது அவர்களுக்குத் தலைகீழ்ப் பாடம்.

**தமிழ் ஊழியர்கள் கூட்டம் கூட்டமாகச் சேவையிலிருந்து விலகினால் ஆட்சியாளரின் மேற்கண்ட நோக்கம் நிறைவேறிவிடும். ஆட்சியாளர் விழி பிதுங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே சேவையினின்று வெளியேறினால் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தமிழ் ஊழியர்கள் அவர்களுக்கு உதவி செய்வதாகிவிடும், வேண்டாம் இந்த விபரீதம்! எக்காரணத்தை முன்னிட்டும் சேவையினின்று விலக வேண்டாம்.**

இக்கட்டத்தில் இளைப்பாறுவதால் முழு உபகாரச் சம்பளமும் கிடைப்பது சாத்தியமன்று. அரைகுறை உபகாரச் சம்பளத்துடன் சேவையினின்று வெளியேறுதல் அறிவுடைமையாகாது. ஒவ்வொருவருக்கும் குடும்பச் சுமை உண்டு. இச் சுமை கூடும்போது அதற்கேற்ப குடும்பச் செலவுகளும் கூடும். குறைந்த உபகாரச் சம்பளத்தைக் கொண்டு அச் செலவுகளைச் சரிக்கட்டுவது வருங்காலத்தில் கடினமாயிருக்கலாம். அவற்றை மனதிற் கொண்டு சேவையில் தொடர்ந்திருப்பதே சாலவும் நன்று.

அதே வேளையில் தன்மானத்தையும் காத்துக்கொள்ள வேண்டும். சேவைக்காகச் சிங்களத்தைக் கற்று மானத்தைக் காற்றில் விடக்கூடாது. அதனால் தன்மானம் மட்டுமா பறிபோகும்? தமிழ் இனமே அழிந்துவிடும். ஆகையால்தான் எழுதுவினைஞர் சங்கம் கூறுகிறது, "சிங்களம் படிக்கவும் வேண்டாம்—சேவையினின்று விலகவும் வேண்டாம்" என்று.

**எத்தகைய இன்னல்கள், இடர்பாடுகள், நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றிபெற வேண்டும் அன்றி, அநீதியை முறியடிக்க எதிர்ப்பு உருவாகிவரும் வேளையிலே சேவையை விட்டு ஓடிவிடுவது கூடவே கூடாது—அது கோழைத்தனம். அதனால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் மாத்திரமின்றி தமிழினத்துக்கே நஷ்டம் ஏற்படும் என்பதை ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் உணரவேண்டும்.**

"சிங்களம் கற்றுக் கொள் — அல்லது வெளியேறுக" என்று தமிழ் ஊழியர்களை நிர்ப்பந்திப்பதற்காகவே அவர்களுக்குரிய சலுகைகளை வழங்க ஆட்சியாளர் மறுக்கின்றனர். சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகிய சலுகைகளை மறுப்பது நியாய விரோதமான செயலென்று, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்துள்ளது. சிங்கள ஊழியர்களுக்குள்ள உரிமைகள், சலுகைகள் அனைத்தும் தமிழ் ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதே சங்கத்தின் கோரிக்கை.

இவ்வழக்கு பிரிவு கவுன்சில் — உயர்நீதிமன்றம் வரை செல்லக்கூடும். எனவே வழக்கின் இறுதித் தீர்ப்பைப் பெற நீண்ட காலமாகலாம். எவ்வளவு காலமாயினும் சரி, வழக்கின் முடிவு தெரியும்வரை காத்திருக்கத்தான் வேண்டும். எழுதுவினைஞர் சங்கம் உரிமைகளைக் காக்கவும் சலுகைகளைப் பெறவும் வேறுவித தொழிற்சங்க நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக அறிகின்றோம். இந்நிலையில் அவசரப்பட்டு, அரசாங்கத்தின் மாய்மாலப் பேச்சில் மயங்கி சேவையை விட்டு ஓடுவது முற்றிலும் தவறு.

வருட இறுதிவரை இளைப்பாற முன்வராத தமிழ் ஊழியர்களை அரசாங்கம் ஒன்றும் செய்துவிட முடியாது. ஊழியர்களை வேலை நீக்கம் செய்துவிட முடியும் என்று யாரும் அஞ்சவேண்டியதில்லை. அது எவ்வகையிலும் சாத்தியமன்று.

சேவையிலிருந்து வெளியேறாது தொடர்ந்து சேவை செய்வதே தமிழ் ஊழியர்கள் செய்யும் ஒரு தியாகமாகும். தமிழ் இனத்துக்காக மட்டுமின்றி தமக்காகவும், தம் குடும்பத்துக்காகவும் இத்தியாகத்தை அவர்கள் செய்தேயாக வேண்டும். நியாயம் வேண்டி அநீதியை எதிர்த்து நிற்கும் அரசாங்க ஊழியர்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

தமிழ் அரசாங்க ஊழியர்களின் போராட்டத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் பேராதரவும் ஒத்துழைப்பும் தேவை. அவர்கள் எல்லோரும் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்புகொள்ளவேண்டும். அதனால் தமிழ் ஊழியர்களின் சேவை அரசாங்கத்துக்கு இன்றியமையாததாகிவிடும். அந்த நிலையைச் சிருஷ்டிப்பது தமிழ் பேசும் பெருமக்களின் தலையாய கடமை!

---

கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள்

# சீன-ரஷ்ய கோஷ்டிச் சண்டை

## இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக இது தடையா?

## கட்டளை பெற்று வர தலைவர் ரஷ்யா பயணம்

கொம்யூனிஸ மண்டலத்தில் பிளவு. சீன-ரஷ்யக் கோஷ்டிச் சண்டை. கொம்யூனிஸ மண்டலத்தின் தலைமைப்பதவியைக் கைப்பற்றுவதே சீனாவின் நோக்கம். உலக நாடுகள் மாஸ்கோவில் நடைபெறும் சீன-ரஷியப் பேச்சுவார்த்தையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பிளவு சீனாவுடனும் ரஷ்யாவுடனும் நின்றுவிடவில்லை. ஏனைய நாடுகளில் உள்ள கொம்யூனிஸ்டுக் கட்சிகள் மத்தியிலும் பிளவை உருவாக்கியுள்ளது.

இலங்கை கொம்யூனிஸ்டுக் கட்சியுள் இந்தப் பிளவு வலுத்துள்ளது. கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய கொம்யூனிஸ்டுக் கட்சியின் வருடாந்த மாநாடு இற்றைவரை நடைபெறவில்லை. மாநாடு நடைபெற்றால் பிரச்சினை பிரேரணை உருவில் வந்து பிளவை வலுப்பெறச் செய்துவிடும் என்ற பயம். மாநாடு ஒத்திவைக்கப்படுவதற்கும் கட்சிப் பெருந்தலைவர்களே காரணமென்றும் அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் நிலவுகிறது.

### தலைவர்கள் ரஷ்யாவுக்கு...

கொம்யூனிஸ்டுக் கட்சியின் பெருந் தலைவர்கள் ரஷ்யக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பது அறிந்ததே. சீனாவை ஆதரிக்கும் கோஷ்டியில் பெருந் தலைவர்கள் இல்லாதுபோனாலும் அதுவும் மிகவும் வலுவான கோஷ்டியாகவே உள்ளது.

கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தொழிற் சங்கங்கள் சீனக் கோஷ்டியைச் சேர்ந்தவை என்று அறியப்படுகிறது. கொம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற் சங்கக் கூட்டணியான இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவர் ரஷ்யக் கோஷ்டியைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், சம்மேளனத்தின் அதிக செல்வாக்குடையவரான சம்மேளனப் பொதுச் செயலாளர் சீனக் கோஷ்டியின் தலைவர் ஆவர். எனவே கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தொழிற்சங்கங்கள் சீனாவின் பக்கமே சார்ந்துள்ளன. தொழிற்சங்க சம்மேளனம் இன்று கட்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையிலிருக்கிறது.

### தமிழ் கொம்யூனிஸ்டுகள் சீன பக்கம்

மேலும் கொம்யூனிஸ்டுக் கட்சியில் இருக்கக் கூடிய தமிழ் உறுப்பினர்கள் சிறு தொகையினர் என்ற போதிலும், அவர்களில் பெரும்பான்மையினர் சீனக் கோஷ்டியையே சார்ந்துள்ளனர். கொம்யூனிஸ்டுக் கட்சி யாழ்ப்பாண பிரதேசக் கமிட்டியும் சீனக் கோஷ்டியின் ஆதிக்கத்திலேயே உள்ளதாம். கட்சியில் உள்ள ஓரிரு தமிழர்களே ரஷ்யக் கோஷ்டியில் உள்ளனர்.

நாட்டில் நடைபெறும் கொம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டமாகிலும்சரி தொழிற் சங்கக் கூட்டங்களாயினும் சரி இரு கோஷ்டித் தலைவர்களும் பேச ஏற்பாடாகியிருந்தால் ஒரே நேரத்தில் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை. முன் பின்னாகவே கலந்துகொள்கிறார்கள். இந்த அளவுக்கு கட்சிக்குள் வேற்றுமை வளர்ந்துள்ளது.

### கட்சி இரண்டுபடாது

பிளவு பெரிதாக இருந்தபோதிலும் எந்தக் கோஷ்டியும் தற்போதைய நிலையில் கட்சியை விட்டு வெளியேறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

சீனக் கோஷ்டியைப் பொறுத்தவரையில் அவர்கள் உள்ளிருந்தே கட்சித் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். சீனக் கோஷ்டி கட்சியை விட்டு வெளியேறினால் பின்னர் கட்சி செயல்படுவதில் அர்த்தமில்லை. காரணம் இருக்கக்கூடிய தொழிற் சங்கங்கள் அனைத்தும் சீனக் கோஷ்டியுடன் சென்றுவிடும். பின்னர், மிஞ்சியிருக்கக் கூடியவர்கள் உயிரற்ற உடம்பாகவே கணிக்கப்படுவர். கட்சியின் மீது தற்போதுள்ள தொழிலாளர் பிடிப்பு தளர்ந்துவிடும்—அல்லது அகன்றுவிடும்.

இத்தனைக்குமிடையில் ரஷ்யக் கோஷ்டிக்குத் தலைமை தாங்கும் தலைவர் அவசரமாக ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். அவர் ரஷ்யா சென்றிருப்பதன் நோக்கம் சீன-சோவியத் மகாநாட்டின் முடிவும், அதன் எதிரொலியும் எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளவும், தாங்கள் எவ்விதம் செயல்பட வேண்டும் என்பதை அறிந்து வரவுமே என்று நம்பப்படுகிறது.

இரு கோஷ்டிகளும் எத்தனை தூரம் ஒன்றுபட்டுச் செயல்பட முடியும் என்பதை மாஸ்கோப் பேச்சுவார்த்தையின் முடிவு ஓரளவு தெளிவுபடுத்தும். சீனக் கோஷ்டியைக் கட்சியினின்று வெளியேற்ற வேண்டும் என்று மாஸ்கோ அவர் மூலம் கட்டளை அனுப்பினால் கட்சி இரண்டுபடக் கூடும்.

### சீனா மீண்டும் தாக்கினால். ......

சீனா மீண்டும் இந்தியாவின் எல்லைப்புறத்தில் ஏராளமாகத் துருப்புக்களைக் கொண்டு வந்து குவிக்கிறது. அது மீண்டும் இந்தியாவைத் தாக்கும் நோக்கம் கொண்டுள்ளது என்றே தெரிகிறது. சீனா இந்தியா மீது தாக்குதலைத் தொடங்கினால் இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சியுள் கோஷ்டிச் சண்டை வலுப்பெறும். சீனக் கோஷ்டியின் கை ஓங்கும். பல திடீர் மாற்றங்கள் நிகழும். சீனக் கோஷ்டி கட்சியைக் கைப்பற்ற முடியாவிட்டால் கட்சியிலிருந்து வெளியேறலாம் என்று அரசியல் வட்டாரங்களின் அபிப்பிராயப்படுகிறது.

### மாறுபட்ட கொள்கை

ரஷியக் கோஷ்டியினர் கடைப்பிடிக்கும் கொள்கைகள் அனைத்துக்கும் மாறுபட்ட கொள்கைகளையே சீனக் கோஷ்டி கடைப்பிடிக்கிறது.

சீனக் கோஷ்டியில் உள்ளவர்கள் புரட்சியில் நம்பிக்கை உடையவர்கள். மாற்றுக் கட்சிகளுடன் ஒத்துழைப்பதையோ அல்லது பாராளுமன்ற நடவடிக்கைகளிலோ இவர்களுக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. இவர்கள் உள்நாட்டு அரசியலில் கடைப்பிடிக்கும் கொள்கையும், சீனா உலக நாடுகளுடன் நடந்துகொள்ளும் முறையும் ஒன்று என்றே அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

### சீனாவின் உதவி

சீனக் கோஷ்டிக்குப் பிரத்தியேகமாக சீனாவிடமிருந்து உதவி கிடைப்பதாகவும் ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. எனவே இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சியின் எதிர்காலம் சீனாவின் கையிலேயே தங்கியுள்ளது. சீனாவின் எதிர்கால நடவடிக்கையைக் கொண்டு கொம்யூனிஸ்டுக் கட்சியின் எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

இத்தனைக்கும் இடையில் இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாவதை இரு கோஷ்டியினரும் வரவேற்கிறார்கள். ஆனால் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் எதிர்கால வேலைத்திட்டத்தில் வேறுபட்டு நிற்கிறார்கள்.

ரஷ்யக் கோஷ்டியைப் பொறுத்த வரையில் இடதுசாரி ஐக்கிய முன்னணியைப் பெரும்பாலும் ஒரு தேர்தல் முன்னணியாகவே கருதுகிறார்கள்.

ஆனால் பாராளுமன்ற நடவடிக்கைகளில் நம்பிக்கையற்ற சீனக் கோஷ்டியோ இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாவதன் மூலம் தேர்தலில் தோல்வி ஏற்பட்டால் நாட்டில் புரட்சியை ஏற்படுத்தி ஆட்சியைக் கைப்பற்ற வழி வகுக்க வேண்டும் என்று விரும்புகிறது. சீனக் கோஷ்டிக்கு ஆதரவான கருத்துடையவர்கள் இதர கட்சிகளிலும் உள்ளனர்.

சமசமாஜக் கட்சியைப் பொறுத்தவரையில் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரபல தொழிற்சங்க

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் இனத்தை அழித்துவிட முனைபவரை எதிர்த்திடுவோம்

## எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்தில் எச்சரிக்கை

தமிழ் பேசும் இனத்தை வேரோடு அழித்துவிடவே ஆளும் கட்சியினர் தீவிரமாகச் செயலாற்றி வருகின்றனர். இதை ஒற்றுமையுடன் எதிர்த்தால் தான் இந் நாட்டில் எம்மினம் வாழ முடியும். எதிர்ப்பின் பயனாகத்தான் இன்று அரசாங்கம் 'பிரச்சினை' தீரவில்லை என்று பகிரங்கமாகக் கூற முன்வந்துள்ளது.' இவ்வாறு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

திரு. செல்வநாயகம் தொடர்ந்து கூறியதாவது: "இன்று ஆட்சியிலுள்ள ஆளும் கட்சியினர் இன அழிப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளனர். பெரும்பான்மை மக்களான சிங்களவர்களுடன் சரிசமமாக நாமும் வாழ வேண்டுமென்றுதான் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தும்படி கோரிக்கை விடுத்து வருகிறோம். சிங்களம் மட்டும் என்று அவர்கள் கூறுவது போல் நாமும் 'தமிழ் மட்டும்' என்று கோரியிருந்தால் அது நடுவு நிலைமைத்தன்மையாகாது.

'தமிழ் பேசும் இனத்தை வேரோடு அழித்துவிட என்னுபவர்களின் நடவடிக்கைகளைப் பல துறைகளிலும் நாம் எதிர்க்க வேண்டும். சிங்கள மொழி புகுத்தலை அரசாங்க ஊழியர்கள் ஒன்றுபட்டு எதிர்த்திருந்தால், இன்று அரசாங்கம் இவ்வளவு தூரம் மொழித் திணிப்பிலும்; இன ஒழிப்பிலும் தீவிரம் காட்ட முடியாது.,

### மாவட்டசபை

'தமிழரசுக்கட்சியும் வேறு பல அரசாங்க ஊழியர்களும் எதிர்ப்புக் காட்டி வருவதனுலேதான் இன்றும் 'பிரச்சினை' தீரவில்லை என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றனர்.

எதிர்ப்பில்லாதிருந்தால், இன்று இக் கூட்டமே நடந்திருக்காது. ஏதோ மாவட்ட சபைகள் என்ற பெயரிலாவது எதையாவது செய்யலாம் என்று ஆளும் கட்சி கூற முனைவதும் நமது எதிர்ப்பின் காரணத்தினுலேயே.'

"தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகத்தின் மூலமோ நேரடி நடவடிக்கைகள் மூலமோ போராடியே தீரும். இன்றுள்ள நிலையில் எதைச் செய்தாலும் தலைவர்களைப் பிடித்துச் சிறை வைத்துவிட்டு அரசாங்கம் மிகச் சுலபமாகத் தனது திட்டங்களை அமுலாக்கிவிடும். ஆகவே நாம் எதிர்ப்புக் காட்டும் முறைகளை விட்டுவிடலாகாது."

### தியாகம் செய்ய வேண்டும்

சங்கத்தின் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் பேசுகையில், சிங்களம் படிப்பது ஒரு சிலரின் பிரச்சினை மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு காலக் கண்ணுடியாகும். சிங்களச் சட்டத்தை ஏற்று விட்டோமானுல் அத்தோடு நமது இனம் அழிந்து விட வேண்டியதுதான்.

அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் மட்டும் கருதாது, ஓரளவு இனத்துக்காகத் தியாகம் செய்யவும் முன் வர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

### போதனையும் சாதனையும்

அஞ்சல் எழுது வினைஞர் சங்கப் பொருளாளர் திரு. ச. அ. செபரெத்தினம் 'பௌத்த போதனைகளின் படி நடப்பதுதான் ஒரு பௌத்தனின் கடமைஎன்று பிரதமர் கூறிவருகிறுர். ஆனுல், அவரோ அதன்படி நடப்பதாக வில்லை. தினசரி ஒரு பௌத்தன் எடுக்கும் முக்கியமான பிரதிக்ஞை 'நான் மற்றவர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்' என்பதாகும். இதைக் கூறிக் கொண்டே நம்மை நசுக்க முனைகிறுர்.

வித்யாலங்கார, வித்யோதயா ஆகிய பல்கலைக் கழகங்களில் சிங்களம் மட்டும் படித்துப் பட்டப்பெற்று வரும் சிங்களவர்களுடன் தமிழ் பேசும் மக்கள் போட்டியிட்டு வெற்றியீட்ட முடியுமா?' என்று வினவினுர்.

அடுத்துப் பேசிய துறைமுக நாவாய் இயக்குனர் கழகச் செயலாளர் திரு. செ. ஜோ. பிரிட்டோ, சிங்களம் மட்டும் கொள்கையை எதிர்ப்பதில் எதுவித தயக்கமுமின்றி முன்னேற வேண்டும் என்றுர்.

### யாருக்கு நன்மை?

'மலையகத்துக் குழந்தைகளுக்குக் கட்டாய சிங்களம் போதிக்க வேண்டும் என்றும், தமிழ் பேசும் பிள்ளைகள் இரண்டாவது மொழியாக சிங்களம் கற்க வேண்டுமென்பதாலும் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களுக்குத்தான் வேலை கிடைக்குமே ஒழிய, இரண்டாவது மொழியாகச் சிங்களம் பயின்று நாம் எக்காலத்திலும் முன்னேறவே முடியாது' என்று அரசினர் பாடசாலை ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. வ. மகாலிங்கம் சொன்னுர்.

உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், அரசாங்க எழுது வினைஞர் சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

---


**சென்ற். அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ்**

இலங்கையில் தங்கள் சொந்தத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றோர் உற்பத்தி சாமானை அறிமுகப் படுத்துவதில் பெருமிதமடைகிறுர்கள்.

**கல்வனைஸ்ட் வாளிகள்**

கல்வனைஸ்ட் வாளிகள் உற்பத்தி செய்யும் பிரமாண்டமான இயந்திரங்களின் அநுசரணையுடனும் அயல் நாட்டு தொழில் நுட்ப உதவியுடனும் முதன் முதலாக இலங்கையில் இயங்கும் தொழிற்சாலை இதுவே.

**சென்ற். அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ்,**
752, பேஸ்லைன் ரோடு,
கொழும்பு-9.


### இந்தி எதிர்ப்பு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நெருக்கடி காங்கிரஸ் கட்சிக்கு மண்டையிடியைக் கொடுத்துள்ளது.

கேரள மாநில முதல் மந்திரி திரு. சங்கர் மீது காங்கிரஸ் கட்சியே லஞ்சக் குற்றம் சாட்டியுள்ளது. இதனுல் கேரள காங்கிரஸ் கோட்டையில் வெடிப்புத் தோன்றியுள்ளது. இக் குற்றச் சாட்டை விசாரிக்க அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கேரளம் வரவிருக்கிறுர்.

மாளவியா லஞ்ச வழக்கை விசாரிக்க ரகசிய, சுப்ரீம் கோர்ட் நீதிபதி, காங்கிரஸ் முதல் மந்திரி திரு. சங்கர் லஞ்சத்தை விசாரிக்க காங்கிரஸ் காரியதரிசியா? காங்கிரஸின் இந்த முடிவை இந்திய அரசியல் வட்டாரங்கள் மிகுந்த கவலையுடன் நோக்குகிறது.

### சீன-ருஷ்ய...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றின் பொதுச் செயலாளரும், இன்னும் ஒரு சிலரும் இந்தப் புரட்சி முறையில் நம்பிக்கை உடையவர்களாகவே உள்ளனர்.

இவர்களும் சம சமாஜக் கட்சியைப் பொறுத்தவரையில் இரண்டாந்தரத் தலைவர்களே. இது போன்று மக்கள் ஐக்கிய முன்னணியிலும் ஒரு கோஷ்டி உண்டு.

இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாகினுலும் அதனுள்ளும் மிதவாதிகள் கோஷ்டியும் தீவிரவாதிகள் கோஷ்டியும் இருக்கவே செய்யும். மூன்று கட்சிகளிலுமுள்ள தீவிரவாதக் கோஷ்டிகளும் ஒன்று சேர்ந்து இடதுசாரி முன்னணிக்குள் ஒரு கோஷ்டி அமைத்துக்கொள்ளக்கூடும்.

எனவே இடதுசாரி முன்னணி உருவாகினுலும் அங்கும் கோஷ்டிச்சண்டையைத் தவிர்க்க முடியாது. ஆகவே அவர்கள் எதிர்பார்க்கும் செயல் திட்டங்கள் நடைமுறைக்கு வரவேண்டுமென்றே, ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென்றே நம்ப இடமில்லை.

### சிங்களமே........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மாற்ற உத்தேசித்துள்ளனராம்.

முன்னைய மசோதாவின் விபரங்களெல்லாம் உருக்குலைக்கப்பட்டு சின்னுபின்னமாக்கப்பட்டுவிட்டதாக நம்பகபாகத் தெரிய வருகிறது.

### கொழும்பில் 'வாழ்வு' அறிமுக விழா

கொழும்பு—ஜுலை 11.

ஈழத்துப் பிரபல சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராகிய திரு. நாவேந்தன் எழுதிய 'வாழ்வு' சிறுகதைத் தொகுப்பு அறிமுக விழா 13-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

திறைசேரிப் பிரதிச் செயலாளர் திரு கு. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் திருவாளர்கள் நாவற்குழியூர்—நடராசன், இலங்கை வானெலி, தமிழ் நிகழ்ச்சி அதிகாரி, ஈழவேந்தன், வித்துவான் இ. சி. சோதிநாதன், இ. சங்கரப்பிள்ளை, செல்வி சற்சொரூபவதி நாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பண்டிதர். கா. பொ. இரத்தினம் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.


சோதனையில் சித்தி பெறவும், படித்த, பாடங்கள் மனதில் இருக்கவும் லேசான வழி உண்டு.
உடன் எழுதுங்கள்
**பி. எம். திசாநாயக**
கம்பனி.



**காலமெல்லாம் கட்டழகு கலையாதிருக்க.....**
என்றும் அணியுங்கள்;

**லதா மணிப்புரி சாரிகள்!!**



**லதா மணிப்புரி சாரிகள்;**

முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினுலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள.

**எலைட் சுப்பர்லோன்**

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

**குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,**

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி: 110&114 ,மெயின் வீதி,

**கொழும்பு.**

—Mylads—




கூட்டாக எழுதும் தொடர் கதை

## இரண்டாம் பாகம்

# கதிர் ஒன்று
# மலைப்பாதை

'தடக்!...தடக்..!...தடக்!...' ...இருட்டைக் கிழித்துக் கொண்டு ரயில் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. நாரீமணிகள் தமது கன்னங்களில் அரும்பும் மென் வியர்வையை, பௌடர் கலையாமல் நாசூக்காக ஒற்றிக் கொள்வது போல், வெளியே பரவிக் கிடக்கும் கும்மிருட்டின் மேல், ரயிலிலிருந்து ஜன்னல் வழியாக வீசும் ஒளிக் கற்றைகள் தடவிச் செல்கின்றன! மரங்களெல்லாம் ஓடி மறைந்து கொண்டிருக்கின்றன. ஜன்னலூடாக கூதல் காற்று 'விர் விர்' என்று பாய்ந்துகொண்டிருக்கிறது...காற்று அவன் முகத்திலும் மார்பிலும் பலமாக வந்து மோத, உடல் விறைத்துப் போய்க் கிடக்கிறது...

'இந்த மரங்களைப் போலத் தான் வாழ்விலும் பணமும் மனிதர்களும் வருவதுபோல் வந்து மறைகிறார்கள்...இந்த அற்ப நேர சந்திப்புக்குள் தான் உலகில் எத்தனை போராட்டங்கள்!...'

'தம்பி!...அந்த ஜன்னலை ஒருக்காச் சாத்து மோனை!... பெரிய சன்னியைக்கொண்டு வரும் போலக் கிடக்கு!...... தடிமன் போடப் போகுது!... இஞ்ச பாரன் கை காலெல்லாம் மரத்துப் போய்ச்சு!...' —ராஜா திரும்பிப் பார்க்கிறான். அவனது ஆச்சியைப் போல ஒரு வயதான பெண்மணி, சீலையால் தோள் மூட்டுகளைச் சுற்றி குளிருக்கு அடக்கமாகத் தன்னை ஒடுக்கிக் கொண்டிருக்கிறாள்!...

'மனமே மரத்துப் போய்க் கிடக்கு!...இனி இந்தக் கூதல் காத்துத்தான் விறைக்க வைக்கப்போகுதா?..'-அவன் மனம் தத்துவார்த்த சிந்தனையிலீடுபடுகிறது. கையறு நிலையில் இப்படிப்பட்ட விரக்தி நிரம்பிய தத்துவார்த்த சிந்தனைகள்தான் நொந்த மனதுக்கு ஆறுதல் கொடுக்கின்றன.

'கிளிக்!...படக்!......'—ஜன்னல் கீழிறங்கி அடைபடுகிறது.

சன்னலை அடைக்கச் சொன்ன பெண்மணியைப் பார்க்கிறான். இப்படித் தான்...இப்படித்தான் ஆச்சியும்...குளிருக்கு அடக்கமாக இருப்பா!..மனம் ஆச்சியைப் பற்றிய நினைப்பில் அமிழ்ந்து விடுகிறது.

'........உதென்னடா நடராசா!......அவனைச் சும்மா விட்டிட்டாய்!... அவனுக்குப் படிப்பு வேண்டாமெண்டா வீட்டோட கிடக்கட்டுமே!.. அவன் இப்ப உழைச்சுத் தான் இங்க வீடு நெறைய வேணுமா? அவனைப் போக விடாதேடா நடராசா!...'... பாசம் குரல் கொடுத்து அலறுகிறது.

'என்னுச்சி!......எத்தனை நாளைக் கெண்டு நானும் அண்ணனுக்குப் பாரமாக இருக்கிறது...... அண்ணனுக்கும் கொஞ்சம் உதவியாக இருக்க வேண்டாமா?...'

'ராசா!...அதுக்காக நீ போய் அந்த மலை நாட்டில அட்டைக் கடிக்கேக்கையும், குளிருக்கேக்கையும் கிடந்து சாகப்போறியே?...'

'அந்த இன்னலுக்குள்ள கிடந்துதான் எத்தனையோ தியாக உருவங்கள் நாட்டின் பொருளாதாரத்தையே வளப்படுத்தி வருகின்றன?... அவர்கள் துன்பங்களின் முன் நான் ஒன்றும் அவ்வளவாக அனுபவிக்கப் போவதில்லை...'

'என்ன தம்பி!......உன்னை அங்கு அநாதையாகக்கிடக்க விட்டுட்டு, இங்க நாங்க நிம்மதியாக் கிடப்பமாடா?... இந்த வயதான காலத்தில எனக்கருகில இருக்காம எங்கேயோ போறனெண்டு நிக்கிறியேடா?..ஏண்டா என்னை வதைக்கிறாய்?...'

'அங்க ஏன் மனிஷரில்லையே?... அங்கையும் மக்கள் தான் வசிக்கினம்.'

'உதென்னடா கதை...... அங்க மனுஷரிருந்தாலும் அவை உனக்கு இங்க உள்ள இனஞ்சனம் மாதிரியிருப்பினமோ?... இங்கையெண்டா தலையிடி, காய்ச்சல் என்று ஒண்டு வந்திட்டா உன்னைப் பாத்துக்கொள்ள நாங்க இருக்கிறோம். அங்க உனக்கொரு தலையிடி வந்திட்டாக் கூட 'சுக்குத்தண்ணி' போட்டுத் தரக்கூட ஒருத்தர் கூட இருக்கமாட்டினமேடா?...இப்ப நீ அங்கு போனு... இங்க ஒவ்வொரு நிமிடமும் நான் செத்துக் கொண்டிருப்பன் என்பதை நீ மனதில வைச்சுக்கொள்ளடா...'

'ஆச்சி!... என்னைக் கோவியாதையணை...எனக்கு வாழ்விலே ஒரு நம்பிக்கை ஒரு பிடிப்பு ஏற்பட நான் போய்த்தானுகவேண்டும்!...'

'டேய்... டேய்!...... பாசத்தையும் பரிவையும் கலந்து காட்ட உனக்கொரு அண்ணனும் ஆச்சியுமிருக்கேக்க ஏற்படாத 'பிடிப்பு' தனித்துப் போய் அநாதையாகக் கிடக்கும் போது ஏற்பட்டு விடுமாடா?.....ஏண்டா எங்களை அவமரியாதைப்படுத்தி துன்பப்படுத்துகிறாய்!...'

'ஆச்சி!...'

'டேய்!......நீ பேசாதை!... இவ்வளவு நாளும் உன்னைத் தோளிலும் மார்பிலும் தூக்கி வளர்த்தவள் நான்!... எனக்குக் கதை சொல்லாதே!...அன்னையை இழந்து நீ பாலுக்காக அழேக்க நான் நான் 'கவ்வங்கேற்' மாவை உனக்குக் கரைத்துத் தர முன், நீ பசியால் பரிதவித்

செம்பியன்செல்வன்

துப் போய்த் துடிக்க, எனது பாலில்லா மார்பை உன் வாயில் திணித்துத் தாக் காட்ட முனையும்போது, நீ பால் கிடைக்காத ஏமாற்றத்தின் ஆத்திரத்தால், அரும்பிவரும் உன் பற்களால் ரத்தம் வர மார்பைக் கடிக்கேக்க கூட நான் இவ்வளவு வேதனையோ, துன்பமோ பட்டதில்லையடா தம்பி?..இப்ப நீ சொன்னியே எங்களை விட்டுப் போனுத் தான் உனக்குச் சந்தோஷம் என்று......உனக்கு நாங்க என்ன கெடுதியடா செய்தோம்!...'—பாசம் துன்ப வேதனையில் அரற்றுகிறது.

'ஆச்சி!.....'—ரத்தநாளமே உணர்ச்சிக் குமுறலில் வெடித்துவிடும் போலக்கூவுகிறான்.

அனைவரும் சிலைகளாகி..... சிலைகள் கண்ணீர் வடிப்பதில்லையே!

'தம்பி நீ அவசியம் போகத்தான் போறியா?...எனக்கொரு உடன் பிறந்த தம்பியில்லையேயெண்டு ஏங்கிக் கிடந்த எனக்கு உடன் பிறந்த தம்பியிலும் மேலாக என்னிடம் அன்பு காட்டி... என் மூத்த பிள்ளை போல இருந்த நீ என்னை விட்டு... எங்களை விட்டு விட்டு......நீ எங்களை விட்டு அவசியம் போகப் போறியா?...பிறக்கப்போகும் உன் அன்பு மகனைக் கூடப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் கூட வா உனக்கு அற்றுவிட்டது..... உன் இதயத்தை ஏன் தம்பி இரும்பாக்கிக்கொண்டாய்..'

'அண்ணி!......அண்ணி!...... எனக்கு உன் மகனைப் பார்க்க இல்லாத ஆவலா?...உனக்கு மகன் பிறந்த செய்தியை எனக்குத் தந்தியில தெரிவித்தால் உடனேயே ஓடி வரமாட்டேனு?...இதற்கெல்லாவற்றையும் விட முக்கியமான சில விடயங்கள் என் இதயத்தில் இடக்கின்றன என்பதை நீ புரியாதவளல்ல!.. புரியாத மாதிரி நடிக்கிறீங்க!...என் மேல் நீங்கள் ஒவ்வொருத்தரும் மாறி மாறி அன்புச் சுமையை அழுத்தாதீர்கள்......என்ருல் எதையும் தாங்க முடியும்... ஆனுல் இந்த அன்புச் சுமையை என்னுல் தாங்கவே முடியாது...அன்புச் சுமையைக் கூட்டிக் கூட்டி என்னை நீங்கள் எல்லாரும் நிறுத்த முனைந்தீர்களெண்டால் எனக்குப் பெரிய பாவத்தைச் செய்கிறீர்களெண்டு தான் நான் நினைப்பேன்!...'

'தம்பி, நான் உன்னைப் புரிந்துகொண்டேன்!... ...'— அவள் மெல்லமாக முனகுகிறாள்.

'தம்பி, இனி நான் உன்னை வற்புறுத்தப் போவதில்லை. உன் இஷ்டம்!..ஆனுல் உனக்காக இங்கே இரு தாய்மை உள்ளங்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டு, உன் நன்மைக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் என்பதை மறந்துவிடாதே!...'

'என்ன பிள்ளை!......நீயுமா அவனேடை சேர்ந்துகொண்டு ...ஏனடிபிள்ளை என்னை வதைக்கிறீங்க...' ஆச்சியின் குரல் ஆதுர இரக்கத்துடன் ஒலிக்கின்றது.

'தடக்!...தடாங்!...'

—பேராசையுடன், ஒரு குலுக்கலுடன் ரயில் நிற்கிறது. சிந்தனுலயத்திலிருந்து, ராஜாவின் உணர்வு விடுபடுகிறது.

'என்ன ஸ்டேஷன்?'

'கிளிக்!...தடக்!......'—ஜன்னலை அவன் கரங்கள் உயர்த்தி நிறுத்தித் திறக்கின்றன. தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டி எட்டிப் பார்க்கிறான். ஸ்டேஷன் தூங்கி வழிந்துகொண்டிருக்கிறது. தூக்கக் கலக்கத்துடன் பிரயாணிகள் சுரத்தில்லாமல் ஏறி இறங்குகின்றனர். ஊமை வெளிச்சத்தில் ஸ்டேஷன் பெயர் போடு மங்கலாகத் தெரிகிறது.

'பொல்காவலை!'

—தனது பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு கீழே இறங்குகிறான். ரயில் புறப்படுகிறது!....இனி அவனுக்கு கண்டிக்கு 6-10 மணிக்கு!.....இரண்டும் கெட்டானுன அந்த அகால வேளையில் அடுத்த ரயிலுக்காகக் காத்திருக்கிறான்.

* *

ஸ்டேஷன் அழுது வடிகிறது. கண்டி ரயிலுக்காகக் காத்திருக்கும் பிரயாணிகள் மிகச் சிலரே! அவர்களும் மூலைக் கொருவராக முடங்கிக் கிடக்கிறார்.

—ராஜா 'மரப்பெஞ்சில்' தனது பெட்டி படுக்கைகளை வைத்துவிட்டு முடங்கிப் படுக்கிறான். நிலாவின் ஒளிக்கீற்றுகள் அவன் முகத்தில் விழுந்து இதம் கொடுக்கின்றன. முனைகளற்ற முழுமதி நிர்ச்சலனமற்ற வானத்தில் ஏகசக்கராதிபத்தியாகி, தனது சாம்ராஜ்யத்தைப் பரிபாலனம் புரிகின்றது. பாற்கதிர்கள் பாதையெங்கும் ஒளி வெள்ளத்தைக் கொட்டிச் சிரிக்கின்றன. வைரத் தாரகைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்ன...

நிலவில் தன் குளிர்முகம் காட்டி நகைக்கின்றாள், புவனம்...

வேப்ப மரக் கிளைகளின் இலைகள் கண்ணீர் சொரிகின்றனவா?...காற்றிற்குச் சலனமில்லை; நிலவுக்கு ஒளியில்லை; மனதுக்கு இதமில்லை; பிரிவுக்குத் துணையில்லை. பிரபஞ்சமே துயரில் மூழ்கிப்போய்க் கிடக்கிறதா?

'...ராஜ்!... அப்ப என்னை விட்டுப் போகப் போகிறீர்களா?......' —வார்த்தைகளை அவளால் முடிக்க முடியவில்லை. அதற்கிடையில் நெஞ்சத்தின் அடிவாரத்திலிருந்து கிளர்ந்தெழும் பிரிவுத் துன்பம், வாயிலே விம்மலாக உருவெடுக்க, நாத் தளதளக்கிறது.

'புவனம்!...என்ன இது?...' —பதறித் துடிக்கிறான். அவனுக்கே என்ன பேசுவது?... என்ன செய்வது?...எப்படித் தேற்றுவது?...தடுமாற்றம்!..

'உங்களைப் பிரிந்து எப்படி நான் இங்கு தனித்திருப்பேன் ராஜ்!...'

அவனின் கைகளில் வைரமணிக் கற்கள் உருண்டு சிதறுகின்றன...

'புவனம்!...'—அவன் அன்பின் அடிநாதமாகக் கிளர்ந்தெழுந்த ஒலி, சூழ்நிலையில் மோனத்துடன் ஒன்றி இணைந்து உறவாடுகிறது.

வைரமணிக் கற்கள் சுடுவதுண்டோ?...அவை தண்மையின் உருவங்களல்லவா?

'புவனம் நீ கேட்டியே விடுதலை எப்போ என்று?... அதற்காகத்தான் புவனம் இந்தப் பிரிவுத் துன்பம்...... இன்று நான் பிரியாவிட்டால் எனக்கு விடுதலையில்லை. அன்புச் சிறைதான்! இச் சிறையிலிருந்து கொண்டு என்னுல் எப்படிப் புவனம் உன் விடுதலைக்காகப் போராட முடியும்......ஆதலால், நானே முதலில் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றச் சக்தி உள்ளவனுக...சுதந்திரப் பறவையாக வந்து உன்னை ஊரறிய மணமுடிக்கிறேன்...அப்போது இன்றுபோல் இருள் துணை நிற்காது...சரசரக்கும் காலடி இலைகள் காட்டிக் கொடுத்து விடுமோவென்ற பயமிருக்காது!......' தன்னை மறந்த நிலையில் வார்த்தைகளாக உதிர்க்கிறான்.

'என்ன ராஜ்!......உங்கள் இதயத்தை மூடிவிட்டீர்களா?...பெற்று வளர்த்த தாய் தந்தையரைப் பிரிந்து செல்வதுதான் சுதந்திரமா? ...இது பெண்பிள்ளைகளுக்கு ஓரளவு பொருத்தமாக இருந்தாலும், ஆண்பிள்ளைகளுக்கு......அவர்கள் அன்பைப் பெற்று இஷ்டப்படி நடப்பதுதானே சுதந்திரம் ராஜ்!...'

'புவனம்!...நான் இப்பேறு சுதந்திரம் பற்றித் தர்க்கம் செய்ய வரவில்லை......அதற்கேற்ற மன நிலையோ எனக்கில்லை—ஆனுல் ஒன்று, பருவம் வந்ததின் பின் தனது குஞ்சுகளைக்கொத்தி விரட்டிவிடும் புள்ளினங்களின் பண்பு மனிதன் பாடமாகக் கொள்ள வேண்டிய தொன்று!.....இயற்கையளிக்கும் போதனைகளில் இதுவுமொன்று....'-

ராஜா பேசிக் கொண்டு போகிறான். ஆடுகால் மணியத்தின் கிணற்றில் யாரோ துலா வளைத்துத் தண்ணீர் அள்ளும் சப்தம் சலனத்தை ஏற்படுத்துகிறது.

'ராஜ்!...விடைபெறும் உங்களிடம் சரியாகக் கூடக் கதைக்க முடியாத பாவி நான்!...நீங்க முன்பின் தெரியாத ஊருக்குச் செல்கிறீர்கள்....அங்கு எப்படியோ... ராஜ்!.....ராஜ்!......அங்குள்ள அழகிகள் முன் என்னை மறந்து விடுவீர்களா?......'—தெய்வ சந்நிதானத்தில் மலர்கள் தூவி வழிபடும் பக்தையாக நிற்கிறாள் புவனம்!.

'அடி புவனம்!....உனக்கு உன்னைப் பற்றித் தெரியாது ...உலகத்துப் பேரழகிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து என் முன் வந்தாலும் என் மனத் தராசின் முன் அவர்கள் உன் 'பாததூசி'க்குக் கூட காணமாட்டார்களடி, புவனம்!...' அவன் மார்பில் தஞ்சம் புகுந்த சிட்டுக்குருவியாகிறாள் அவள்!

'ராஜ்!......நான் இப்போ கடவுளை வேண்டுவதெல்லாம் என்ன தெரியுமா?... ஈரேழு பிறவி எடுத்தாலும் என் ராஜ்தான் எனக்குத் துணைவராக வர வேண்டுமென்று!...'

(13-ம் பக்கம் பார்க்க)



ரிஷி
அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# மொழி வழி தொழிற் சங்கங்கள் முகிழட்டும்

## நமது வளர்ச்சி கண்டு தூற்றுபவர்களே. துயர் துடைக்க முன்வருவீர்களா ?

அல்வையூர்
**ச. அம்பலவி**

அழுக்காறு என்பது அண்டியவர் என்ருே அயலவர் என்ருே, அசைக்க முடியாத அன்புள்ளங் கொண்டவரென்ருே பாராமல் பரந்து படுபாவித்தனம் செய்யும் கொடிய நோயென்றே கூறவேண்டும். வளர்ச்சியைக் கண்டு வயிற்றெரிச்சல் கொள்ளும் இந்தப் பொருமை நோயை வளர்க்க வார்த்தைகளை எவ்வாறு அள்ளிக் கொட்டினுலும் தீராது, முடிவுபெருது.

அழகும் பொலிவும் உள்ள பெண்ணைப் பார்த்துப் பேரழகிகளும், புதுப் பணக்காரனைப் பார்த்து முந்திய பணக்காரனும், புதிய தொழிலாளியைப் பார்த்து பழைய தொழிலாளியும், புதிய தொழிற் சங்கவாதிகளைப் பார்த்து முதிய தொழிற் சங்கவாதிகளும் இன்னும் இவ்வாறே எத்தனையோ வகையான பொருமைப் பேய் பிடித்து அலையும் பலரை நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

### அருந்ததியும் விடிவெள்ளியும்

ஆனுல் இன்று, தொழிற் சங்க வானிலே அருந்ததி என்று தம்பட்டம் அடித்துத் தகிடு தத்தம் புரிந்து தம்மைப் பறைசாற்றித் திரிந்த இடதுசாரிக் கைப்பிடிக்குள் இருந்து தேசியம் பேசும் தொழிற் சங்கங்கள் தமிழர்கள் மத்தியில் எழுந்த விடிவெள்ளியைக் கண்டு பேரெரிச்சல், பொருமை, அழுக்காறு கொள்வதை எண்ணினுல் இவர்கள்பால் எள்ளளவும் பரிதாபம் இல்லாமல் எங்கள் அனுதாபத்தை அளிக்க வேண்டிய நிலையை அடைகிருேமல்லவா?

### ஏன் பிரிந்தோம்?

மொழிவழி பிரியும் தொழிலாளர்களைத் தம்மாலான மட்டும் திட்டித் தீர்க்கிருர்கள் தேசியத் தொழிற் சங்கவாதிகள். திட்ட வேண்டிய நிலையை உண்டாக்கிய தேசியத் தொழிற் சங்கவாதிகளே! இனிமேலாகிலும் பிரிந்து செல்பவர்கள், ஏன் பிரிந்து செல்கிருர்கள் அல்லது அவர்கள் உங்களால் பிரிக்கப்பட்டார்களா என்ற கேள்விக்குப் பதிலை, உங்கள் நெஞ்சிலே கைவைத்து உண்மையை உயரிய முறையில் உணர்ந்து அறிய வேண்டிய இன்றியமையாத தன்மையைப் பெறுவீர்களா?

### கற்பரசியும் விலைமாதும்

மொழி வழி பிரிந்து அமைவுறும் தொழிற் சங்கங்களையும், அவைகளினது உறுப்பினர்களையும் பார்த்து இனத்துவேசம் கொண்டவர்கள் என்று வர்ணிப்பதிலோ அன்றி மேடையில் நின்று, திருப்பித் திருப்பித் திட்டுவதினுலோ உண்மை இரவோடு இரவாக மறைந்து போக முடியாது. கிராமங்களில் கூறும் வார்த்தைகளில் கூறப் போனுல் படுமோசமான விலைமாது ஒருத்தி, கற்புடை மகளிர் ஒருத்தியைப்பார்த்து 'தாசி' என்ற வார்த்தையால் அழைப்பதைப் போலாகும். மற்றவர்களைத் திட்டுவதினுல் மதிகெட்ட உங்கள் மகிமையோ மரியாதையோ பெருகிவிடும் என்று எண்ணிவிடாதீர்கள்.

தேசியம் பேசுபவர்களின் நோக்கம், வெட்டுக் காயத்திற்கு கட்டுப் போட்டால் போதுமென்பது. நமது நோக்கம் வெட்டுக்காயத்திற்குக் கட்டுப் போட்டால் மாத்திரம் போதாது, காயம் மாறுவதற்குச் சரியான மருந்தும் போடவேண்டுமென்றும் அத்துடன் உடல் இரத்தம் நஞ்சாகாமல் பார்க்க வேண்டுமென்றும் கூறுகிருேம். அவர்கள் வெட்டுக்காயத்தை மறைக்க விரும்புகிருர்கள், நாம் காயத்தை மாற்றிப் புதிய தெம்பு பெற்று வாழ விரும்புகிருேம்.

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் இரண்டாவது மாநாட்டின் பின் நடைபெற்ற கலை நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த நான், அவர்களால் சைவ மங்கையர் கழகச் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுலோகங்கள் பலவற்றைக் காணக்கூடியதாக இருந்தது. 'தன்கையே தனக்குதவி'— 'மானம் ஒன்றே பெரிதென வாழ்வது நமது சமுதாயம்'—'என்று தணியுமிந்த சுதந்திரதாகம், என்று மடியுமிந்த அடிமையின் மோகம்' என்பனபோன்றும், இன்னும் எத்தனையோ

(13-ம் பக்கம் பார்க்க)


ஒரு ஆரோக்கிய குழந்தையும் ...குதூகலிக்கும் தாயும்



..நன்றி லக்டோஜனுக்கே

உலகப் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான முழு ஆடைப் பால் உணவான லக்டோஜனில் இப்பொழுது ஒன்பது மேலதிக விட்டமின்களும் இரும்புச் சத்தும் அடங்கியுள்ளது. பலம் ஊட்டப்பட்ட இந்த விட்டமின்களால் லக்டோஜன் மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கிறது— உங்கள் குழந்தை திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளருவதைக் கவனியுங்கள். தாய்ப் பால் இல்லாவிட்டால்......லக்டோஜனை நாடுங்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும்.

| | |
|---|---|
| விட்டமின் A | கல்சியம் பண்டோதினேட் |
| விட்டமின் B | விட்டமின் $B_{12}$ |
| விட்டமின் $B_2$ | விட்டமின் C |
| விட்டமின் PP | விட்டமின் D |
| விட்டமின் $B_6$ | இரும்பு |




நீங்கள் லக்டோஜனை நம்பலாம்

# அரசாங்கத்தை ஏமாற்றும் நடிகர்கள்!

## தயாரிப்பாளர்களும் உடந்தை

## கறுப்புப் பணம் வாங்குவதற்குக் கண்டனம்

“நடிகர்களும், தயாரிப்பாளர்களுமாகச் சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகிறுர்கள். இதனுல் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தில் 75 விகிதம் நஷ்டம் ஏற்படுகிறது.” இவ்வாறு மத்திய அரசாங்கத்தின் நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர்.

தென் இந்திய பிலிம் வர்த்தக சபையின் அழைப்பின் பேரில், அவர்கள் அளித்த விருந்தில் கலந்து கொண்ட மந்திரிதம்மைக்கௌரவித்த வர்த்தக சபையாருக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். சபையின் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன் தலைமை தாங்கினர்.



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் 'ஜங்லி' என்ற இந்திப் படத்தில் ஷம்மி கபூர்—சகிரா பானு இப்படித் தோன்றுகின்றனர்.

திரு. தேசாய் தொடர்ந்து பேசும்போது, “கடந்த பதினைந்து வருடங்களாக இந்தியப் படங்களின் நீளத்தைக் குறைக்கும்படி பல தடவைகளில் கோரிக்கை விடுத்துள்ளேன். ஆனுல் இதுவரை எவரும் தலைசாய்க்கவேயில்லை. நம் நாட்டில் கச்சா பிலிம் உற்பத்தி தொடங்கிவிட்டால், பாதகமில்லை. வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் கச்சா பிலிமுக்காக ஏராளமான தொகை அந்நிய செலவாணி நாசமாகிறது. தயாரிக்கப்படும் படத்தின் அளவும், சேதமும் குறைக்கப்படுமானுல், தயாரிப்பின் பொருட்டுச் செலவாகும் பணமும், வெளிநாட்டுக்குச் செல்லும் பணத்தின் தொகையும் சிறியதாகும்.

**நமது சென்னை நிருபர்**

“மேல் நாட்டுப் படங்கள் சுமார் 8000 அடிகளுக்குள்ளேயே அமைக்கப்பட்டு விடுகின்றனவே. இதே மாதிரியாக நாமும் ஏன் செய்யக்கூடாது? படம் நீளமாக விருந்தால், அதற்காக இடப்படும் வரியும் அதிகமாகத்தான் இருக்கும். நீளத்தைக் குறைக்காமல் வரிப்பணத்தைக் குறைப்பது சிரமமாகவிருக்கும்.

### மோசடி

நடிகர்கள் தாங்கள் நடிக்கும் படங்களுக்காக வாங்கும் பணத்துக்கு உண்மையான கணக்குக் காண்பிப்பதேயில்லை. வருமானத்தில் 25 விகிதத்தை மட்டும் காண்பிக்கின்றனர். மீதிப் பணத்தைக் கணக்கில் காட்டாமல் “கறுப்புப்பண”மாக வாங்கி விடுகிறுர்கள். இந்த மோசடிக்குத் தயாரிப்பாளர்களும் உடந்தையாகவே உள்ளனர். இதனுல் அரசாங்கம் 75 விகிதமான பணத்துக்குரிய வரியை இழந்து விடுகிறது.

இந்தலட்சணத்தில் ஏனைய சினிமாத் தொழிலுக்கான வரிகளை எப்படிக் குறைப்பது?”

## தங்கவேலுவுக்கு ஏழு பிள்ளைகள்

ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஒரு தந்தை தன் மனைவியையே இழந்து தவிக்கிறுன். பசி பசி எனப் பதறும் பாலகர்களுக்காக உணவு படைக்க வேண்டிய பொறுப்பு அவனையே சார்ந்திருந்தது.

அடுப்பங்கரைக்குள் புகுந்து அடுப்பை எரிய விடுகிறுன். விறகு எரிய மறுக்கிறது. அவனுடைய உள்ளம் எரியும் வேகத்தில்தான் விறகும் எரிய மறுக்கின்றதோ தெரியவில்லை. சோகமே உருவெடுத்தாற் போல் தன் தலைவிதியை நொந்து கண்ணீர் வடிக்கிறுன்.

தன் நகைச்சுவை நடிப்பால் நம்மைச் சிரிக்க வைக்கும் கே. ஏ. தங்கவேலுதான் இந்த ஏழு பிள்ளைகளுக்கும் தந்தை. (“ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு” என்று தங்கவேலுவின் இல்லற வாழ்க்கையில் பூத்தது ஒரு மலர்தான்.) மனைவியை இழந்துவிட்டு, இள வயதுக் குழந்தைகளுடன் கஷ்டப்படும் புதுமையான சோகப் பாத்திரத்தில் அன்று மெஜஸ்டிக் சலனப் படப்பிடிப்புக் கொட்டகைக்குள் தங்கவேலு காணப்பட்டார்.

ஜெய்குமார் பிக்சர்சார் பெயரிடாமல் தயாரித்து வரும் ஒரு படத்தில்தான் தங்கவேலு இப்படித் தோன்றுகிறுர். எம். எல். பதி தானே தயாரித்து டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை ஒரு வங்காளக் கதையைத் தழுவியது. மக்களன்பன் திரைக் கதை அமைக்கிறுர். கவிஞர் கண்ணதாசன், கு. மா. பாலசுப்பிரமணியம், தஞ்சை ராமையா தாஸ் ஆகியோர் பாடல்களை எழுதுகின்றனர்.

பானுமதி, அசோகன், எம். ஆர். ராதா ஆகியோர் நடிக்கின்றனர்.



எவ்வளவுதான் அன்பைச் சொரிந்தாலும் ஒரு பெண்ணின் மனதை எந்த ஆணுலும் அளந்துவிட முடியாது என்கிறுர்கள். மோட்சேஸ் சித்திராவின் 'பெண் மனம்' படத்தில் நாகேஸ்வரராவ், சௌகார் ஜானகியின் மனதை அளவிட முனைகிறுர். அவர் வெற்றி பெறுவாரா இல்லையா? ...சிலோன் தியேட்டர்ஸ் திரைகள் பதில் கூறும்.

## விந்தியத்தின் விளிம்பிலே

சினிமாக்களில் பார்த்துப் புளித்துப்போன கதையாக இருந்தாலும் நடிகர்களின் திறமையால் நாடகத்தை விறுவிறுப்புள்ளதாக நடித்துக் காண்பித்தார்கள் அறிவொளி கலை அரங்கத்தார். இராசகுருவாக நடித்த திரு. செல்லையாவும், விந்திய வீரனுக நடித்த வீர மோகனும் நன்ருக நடித்தார்கள். வீர மோகனின் வாள் சண்டை இரசிகர்களின் பாராட்டைப் பெற்றது. இன்னும் நன்ருகப் பயிற்சி பெற்ருல் முன்னேறமுடியும். அமைச்சராக வந்த திரு. உதயன் முகபாவத்தால் தனது பாத்திரத்தைக் காண்பித்தார். இளவரசியாக நடித்த செல்வி சந்திரகலாவிற்குப் பயிற்சி காணுது. தோழியாக நடித்த செல்வி கிருஷ்ணகுமாரி மேடைக் கூச்சமின்றி அனுயாசமாகப் பேசி எல்லோரிடமும் தனது திறமையைக் காட்டிப் பாராட்டுதல்களையும் தட்டிக்கொண்டார். எல்லா நடிகர்களும் உச்சரிப்பில் கவனம் செலுத்தவேண்டும்.



'ஜங்லி' வர்ணப்படத்தில் தோன்றும் ஷம்மி கபூர்.

ஒப்பனை நன்ருகஇருந்தது. பாடகர்கள் இடி முழக்கம் போல் அலறினது சகிக்க முடியாமல் இருந்தது. பயிற்சி அளித்த முத்தழகனின் முயற்சி பாராட்டற்குரியது. மண்டபத்தில் நிரம்பியிருந்த இரசிகர்களைக் காணும் பொழுது தமிழ் நாடகங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பது உறுதியாகிவிட்டது.

— “வர்மன்”



துடிக்கும் இளமை கொண்டு மிடுக்கும் துடுக்கும் கொண்டு இளம் உள்ளங்களை மடக்க வருகிறுர்கள் இவ்வழகிகள். சினிமாஸ் திரைகளுக்கு வரும் 'நாக மலை அழகி'யில் இந்த அழகிகளைக் காணலாம்.



கடந்த இரண்டரை வருடங்களாக இலங்கைக் கலைஞர்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட கணபதி பிக்சர்சாரின் “தோட்டக்காரி” சினிமாஸ் திரைகளில் வெகு விரைவில் திரையிடப்படவிருக்கிறது. இலங்கை மலைப் பிரதேசத்தின் இயற்கை வனப்புகளை நல்ல முறையில் படமாக்கியுள்ளனராம். இப்படம் கிரிபத்கொடையிலுள்ள நவஜீவன் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது.

வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க கணபதி பிக்சர்சார் நாவலப்பிட்டிக்குச் சென்றபோது எடுக்கப்பட்ட இப்படத்தில் திரு வி. மோகன்ராஜ், திரு. பெரேரா, திரு. இராஜசுந்தரம், ஒலிப்பதிவாளர் தயானந்த விமலவீர, கதை வசன கர்த்தாவும் டைரக்ரருமான திரு. பி எஸ். கிருஷ்ணகுமார், கதாநாயகியாக நடிக்கும் ஜெயஸ்ரீ ஆகியோரைக் காணலாம். —படம்: மகாலிங்கம்.

# மொழி வழி தொழிற்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையினதாக, திரும்பும் பக்கமெல்லாம் காணக்கூடியதாக இருந்தன.

இவர்களால் பொறிக்கப்பட்ட வாக்கியங்களைக் கண்ணுற்ற பின்பும், தமிழர்கள் அரசாங்கத் துறையில் கடமையாற்றுபவராயினும் சரி, தனியார் துறையில் கடமையாற்றுபவராயினும் சரி, மொழி வழி பிரிந்து, நாம் எமக்காக, பெற வேண்டிய உரிமைக்காக, மொழி வழி பிரிந்து, மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டிய உண்மைப் பொறுப்பை உணராமலிருந்தால் நாம் கண்ணிருந்தும் குருடர்களானவர்களல்லவா? எனவேதான் தமிழர்கள் எங்கெல்லாம் ஏழு பேர்களுக்குக் கூடுதலாக இருக்கிறோமோ, அங்கெல்லாம் மொழியடிப்படையில் தொழிற் சங்கங்களை அமைக்க வேண்டிய பொறுப்பை ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்பதே எனது அவா.

## போற்றுபவர்களும் தூற்றுபவர்களும்

மொழி அடிப்படையில் தொழிற் சங்கங்களை அமைக்குங்கால், உங்களைப் போற்றுபவர்களிலும் பார்க்க, தூற்றுபவர்களே எண்ணிக்கையிலே கூடியவர்களாக இருப்பார்கள். போற்றுபவர்கள் போற்றட்டும், தூற்றுபவர்கள் தூற்றட்டும். பொறுமையை இழக்காமல், அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் நமது வழியே நாம் செல்வோம். நாய்கள் குரைக்கின்றன என்பதற்காக வெண்ணிலா ஒளி பரப்பாமல் இருக்க முடியுமா?

## காலிமுகத் திடலில்

அரசாங்க லிகிதர்சேவைச் சங்கத்தினரின் செய்தி இதழான 'நவ உதயம்' ஏப்ரில்—மே 1963ம் இதழில் '1963ம் ஆண்டு மே தினம்' என்ற தலைப்பில் செய்தி ஒன்று பிரசுரித்திருந்தது. 'காலிமுகத்திடலில் இன, மத மொழி வேற்றுமைகளைக் கடந்த ஒரு நிலையில் தொழிலாளர்கள் ஒரு குடும்பத்தினர்—என்ற உண்மையை உலகறியக் கூடியதாக எல்லோரும் ஒன்ருய்க் கூடினர்'. அச் செய்தித் தாளின் மற்றொரு பந்தியில் தடித்த அச்சில், தமிழர்களின் உள்ளத்தில் உறைக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலோ என்னவோ பின் வரும் செய்தியையும் திருவாய்மலர்ந்திருந்தார்கள். 'காலிமுக மைதானத்தை நோக்கி இம்மாபெரும் ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. 'சாதி பேதம் ஒழிக' 'தொழிலாளர் ஒற்றுமை நீடூழி வாழ்க!' என்று தொழிலாளர்கள் எழுப்பிய கோஷம் வானையெட்டியது. இது இந்நாட்டில் மொழியடிப்படையில் உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாட முயலும் இயக்கங்களுக்கு ஓர் சாவு மணி அடித்து, முற்றுப் புள்ளி வைக்கும்.'

## சாவுமணியும் முற்றுப்புள்ளியும்

'சாதி பேதம் ஒழிக!' 'தொழிலாளர் ஒற்றுமை நீடூழி வாழ்க!' என்ற கோஷங்களை எழுப்பியவர்கள் உள்ளத்தில் 'மொழித் துவேசம் ஒழிக!' 'தமிழர்கள் மொழியுரிமையைக் கொடுங்கள்!' என்ற கோஷங்களை எழுப்ப முடியாமலிருந்த உண்மையை மூடி மறைக்காமல்-வெளியே கூறிய பெருமை இத்தேசியத் தொழிற் சங்கங்களுக்கே உரித்தாகும். தேசியம் பேசும் தொழிற் சங்கவாதிகளே! உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இனத் துவேசிகள் என்று எங்களைத் திட்டித் தீர்க்கும் உங்கள் தொழிற் சங்கங்களைக் கொண்டு தமிழர்களுக்குரிய இடத்தை, தமிழுக்குரிய இடத்தை, வெட்ட வெளிச்சமாக வெளியே கூறுங்கள் பார்ப்போம்! இடத்திற் கொன்று, மேடைக் கொன்று, காலத்திற் கொன்று, நேரத்திற் கொன்ருகக் கூறுவதைக் கேட்டு எங்கள் காதுகள் புளித்துப் போய்விட்டன தமிழர்களின் மொழி உரிமைக்காகப் பெரியதோர் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? இதற்கு உங்களுக்கு அணுவளவேனும் துணிச்சல் இல்லையென்பதை நான் ஏன் தான் கூறவேண்டும். உங்களின் மொழித் துவேசம் இப்படியான நடவடிக்கைக்கு இடம் அளிக்காது தானே! எங்களுக்கு உங்களால் சாவுமணியும் முற்றுப்புள்ளியும் வைக்க முடியுமென்ற நம்பிக்கையிருந்தால் அதை தயவு செய்து நீக்கி விடுங்கள்.

## வளர்ந்து வருகிறோம்

நம் மத்தியில் மொழிவழி பிரிந்து இயங்கும் தொழிற் சங்கங்களின் தொகை பதினறுக்கு மேற்பட்டு விட்டது என்று அறிந்து மிகவும் பெருமை அடைநதேன். இலங்கைத் தொழிலாளர் கழகம் போல், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் போல், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் போல், திருமலைத் துறைமுகத் தொழிலாளர் கழகம் போல், கொழும்புத் துறைமுக நாவாய் இயக்குனர் கழகம் போல், தமிழர்கள் எத்துறையில் கருமமாற்றினுலும், ஏழு பேருக்குக் கூடுதலாக இருப்பீர்கள் என்ருல், அத்துறையில் ஒவ்வொரு தொழிற்சங்கத்தை அமைத்து நமது பலத்தை அசைக்க முடியாததாக அமைக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

## முகிழ்வும் மகிழ்வும்

'ஒற்றுமையிற்ருன் நமது வாழ்வு' என்ற உண்மை பொய்யாகக் கூடாது. மொழி வழி தொழிற் சங்கங்கள் முகிழட்டும், அது கண்டு நமது சமுதாயம் மகிழட்டும்! வாழ்க மொழி வழித் தொழிற் சங்கங்கள்! வளர்க தமிழ்த் தொழிலாளர் ஒற்றுமை!

# பாரினில் சிறுமை கண்டு பொங்கிய....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரவாதியான பாரதி நிதானக் கட்சியாரை (Moderates)—திலகரை நிதானக் கட்சியார் பரிகாசம் செய்வதாக எழுதி—தாக்குவதும் இதனுலேயாம். இத்தீவிர தேசியவாதத்திற்கும் பலாத்காரப் புரட்சிக்கும் முடிச்சுப் போடுவது வேடிக்கையான செயலாகும். இருபதாம் நூற்ருண்டின் தேச பக்தியே கம்யூனிஸம் எனவே தேச பக்தர் பாரதி ஒரு கம்யூனிஸ்ட் என்று வாதிப்பது, எல்லாம் பொருள், மனிதனும் பொருள் மண்ணும் பொருள், எனவே மனிதன் மண் என்று வாதிப்பது போலாகும். இத் தவருன கருத்துக்குக் காரணம் உருசியப் புரட்சியாகும். உருசியப் புரட்சியைப் பற்றியும் அப்புரட்சி பற்றி பாரதியின் கொள்கை என்ன என்பதையும் நன்கு விளங்கிக்கொண்டால் இம்மயக்கத்திற்கு இடமிராது.

## உருசியப் புரட்சி

"முதலில் 1917ம் ஆண்டு உருசியாவில் ஏற்பட்ட புரட்சி கம்யூனிஸ்ட் புரட்சி அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். புரட்சிவாதிகளின் முழு நோக்கமும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதேயல்லாது கம்யூனிசத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதல்ல. அதிகாரம் கைப்பற்றப்பட்ட பின் புரட்சித் தலைவர்கள் மார்க்ஸிய தத்துவத்தின் அடிப்படையில் தொழிலாளர் அரசாங்கத்தை நிறுவினர். கல்வியறிவில்லாத மக்களைக் கட்டி ஆள வேண்டிய நிலை, உள்நாட்டுக் குழப்பம், வெளிநாடுகள் தொந்தரவு தரக்கூடும் என்ற பயம், புரட்சித் தலைவர் லெனினின் உயிருக்கு ஏற்படவிருந்த ஆபத்து ஆகிய காரணங்களினுல் தீவிர தேசியத்திற்கும் மார்க்ஸியத்திற்கும் முதலிடங் கொடுத்துச் சர்வாதிகார முறையில் ஆள வேண்டிய நிலை ஏற்பட்டது."(Vide: Reflections on the Revolution of our time — H. J. Laski) எனவே 1917ம் ஆண்டுப் புரட்சியைக் கம்யூனிஸ்ட் புரட்சி என்பதும் பாரதியைக் கம்யூனிஸ்ட் ஆதரவாளன் என்பதும் தப்பாகும். பாரதி 'உலக முழுமையிலுமே ராஜாங்கப் புரட்சியேற்படுத்த வேண்டுமென்ற கருத்துடைய ருஷ்ய ஜனதிபதி திருவாளர் லெனினின்' கொள்கையைத் தவருனது என்று கண்டித்துத் தான் பலாத்காரப்புரட்சியை ஆதரிப்பவர் அல்ல என்று கூறுவதைப் பலர் அறியார். அடுத்துப் புரட்சிவாதி என்று பலர் போற்றும் பாரதி சாதி வேற்றுமையை 'ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்ட சபைகளிலே எல்லா ஜாதி மக்களும் கலந்திருப்பார்களாதலால் அந்தச் சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவது ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கைகளை நிறுத்திவிடலாம், பிறகு சமூக வாழ்விலும் அக் கொள்கைதானே பரவி விடும்' என்றும், 'பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட நிலச்சுவான்கள் பொதுமக்களுடன் தொழில் நிர்வாகச் சங்கம் அமைத்துப் பல தொழில்கள் செய்து பசியின்றி வாழ தெய்வ சந்நிதியில் செப்புப் பட்டையம் எழுதிக் கொடுக்கவேண்டும்' என்று கூறுவாரா? 'மனித சுதந்திரம்' பற்றிப் பேசும் பாரதியைக் கம்யூனிஸ்ட் என்று சொல்லலாமா? மேலும் கம்யூனிஸ்ட் பாரதி 'மாகாளி பராசக்தி உருசிய நாட்டினின் கடைக் கண் வைத்தாள்' என்று பாடுவாரா?

## 'புதிய உருசியா' ஏன் பாடப்பட்டது?

இனி, புதிய உருசியா என்ற பாட்டைப் பாரதி என்ன காரணத்தினுல் பாடினுர் என்று பார்ப்போம். ஆங்கிலக் கவிஞன் ஷெல்லியால் கவரப்பட்டு ஷெல்லிதாசன் என்று புனை பெயர் பூண்டிருந்த பாரதி விடுதலை வேட்கை கொண்டிருந்த ஷெல்லியைப் பின் பற்றியே இப்பாட்டைப் பாடினுர். [Vide: Tamil Culture-Bharati & Shelley-Satchitananthan] அடுத்து, உருசியப் புரட்சி 'துன்பக் சட்டுச் சிதறி விழ' வழி வகுத்தது என்பதனுல்—அது பலாத்காரப் புரட்சியாய் இருந்துங் கூட — பாரதியின் விடுதலை உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. கவர்ந்தாலும் அப் புரட்சி பலாத்காரத்தால் ஏற்பட்ட படியால் நிலையற்றது என்றே நம்பினுர். 'ருஷ்யாவிலுங் கூட இப்போது ஏற்பட்டிருக்கும் ஸோஷலிஸ்ட் ராஜ்யம் எக்காலமும் நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை' என்று பாரதி கூறியதை உற்று நோக்குக. மேலும் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை' சுதந்திர நாடாகக் காண ஆவலுற்ற கவி இப்பாடலைப் பாடி இந்திய மக்களைச் சுதந்திர தாகம் கொள்ளச் செய்ய எண்ணினுர் எனலாம். பாஞ்சாலி சபதம் ஏன் பாடப்பட்டதோ அதே காரணத்துடன்தான் 'புதிய உருசியா' 'மாஜனியின் சபதம்', 'பெல்ஜியத்துக்கு வாழ்த்து' ஆகிய பாடல்களும் பாடப்பட்டன என்று கூறுவதில் தவறில்லை.

## பாரதி கண்ட அரசியல்

எனவே, பாரதியின் அரசியல் கொள்கைதான் என்ன? சுருக்கமாக, முதல் பாரதி ஒரு கவி, பிறகு அவர் ஒரு அரசியல் பார்வையாளர் [Political Observer] என்று கூறலாமே தவிர இன்ன அரசியல் கொள்கையுடையவர் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. அதனுல் அவர் கொள்கையற்றவர் என்பதல்ல கருத்து. அவரின் ஒரேயொரு கொள்கை நாட்டுக் குழைத்தலாம். 'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல்' என்பதும் காண்க. தன் பாட்டின் வாயிலாக நாட்டிற்குத் தொண்டாற்றினுர் என்பதற்கு அவரின் சுதந்திரப் பாடல்களே சான்ருகும். குறிப்பிட்ட அரசியல் கொள்கையற்றவர் என்பதற்கு வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு என்னும் ஆசிரியப் பாவே சான்ருகும். பாரதி தன் பத்திராதிபரை மகிழ்விக்க வேண்டியும், பொருள் நெருக்கடியின் நிமித்தமும் இப்பாடலைப் பாடியிருக்கலாம் என்றும் 'மற்றென் சேய்கள் வாழிய வாழிய' என்று பாட்டை முடிப்பதிலிருந்து அவரின் தேசிய உள்ளத்தை விளங்கிக் கொள்ளலாம் என்றும் வாதிப்போர் அனுதாபத்துக்குரியவர்கள். பாரதியின் கவித்துவத்தைக் குறைகூறுவதாக எண்ணியே இப்படி வாதிப்பர். எவர் எப்படிக் கூறினும் இப்பாடல் தீவிர தேசியவாதத் தன்மையில் ஏற்பட்ட ஒரு சிறு வடு என்பதை மறைக்க முடியாது. முடியாவிட்டாலும் இதனுல் அவரின் கவித்துவத்திற்கு ஒரு குறையும் வராது தமிழ் மக்கள் நெஞ்சிலே நீங்காத இடம் பெற்றுள்ள பாரதி இறப்பின்றித் துலங்குவார் என்பது நிச்சயம்.

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

—புவனத்தின் தாய் அவளை அழைப்பது கேட்கிறது.

'நான் வரட்டுமா, புவனம்!...'

—மௌனமாகத் தலையசைத்த அவள் அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகையை அடக்க முடியாமல் 'ஹோ!...' என்றலறியவாறு அவன் பாதங்களில் வீழ்கிருள்!...

'கூ கூஉ!...கூ!...கூ!...'-ரயில் புறப்படப்போகும் ஓசை கேட்டுக் கண் விழிக்கிருன். கண்டி ரயில் தயார்ராக நிற்கிறது.

* * *

'கூ கூஉ!......'—பலத்த பெருமூச்சு விட்டுக் கொண்டு, நிறைமாதக் கர்ப்பிணி நடக்க முடியாமல் நடப்பதுபோல் ரயில் அந்த மலைப் பாதையில் வளைந்து வளைந்து ஊர்ந்து செல்கிறது...ஜன்னலுக்கு வெளியே மலைநாட்டின் இயற்கைக் காட்சிகள் கோலம் விரிக்கின்றன. யாழ்ப்பாணத்துக்கு முற்ருக வேறுபட்ட அக்காட்சி அவன் மனதுக்கு இதமளிக்கின்றது. மலைக் குகைகள் இடையிடையே வந்து போகின்றன.

'இது போலத்தான் வாழ்வுமா?...குளிர்ந்த சுத்தமான வெளியினூடாகச் செல்லும் வாழ்வு, குகை போன்ற இருண்ட பாதையினூடாகவும் செல்கிறதா?...அப்படியானுல் என் வாழ்வு இப்போது இருண்ட பாதையில் செல்கிறதா?...'

—ஜன்னலூடாக வந்து விழும் கரித் துகள்கள் கண்களில் விழுந்து அவற்றை ரத்தச் சிவப்பாக்குகின்றன. அவன் எழுந்து கண்ணுடி ஜன்னலை மூடி...

'ராஜ், உங்கள் இதயத்தை மூடி விட்டீர்களா?...'

—இதே கேள்வியைத் தான் பாலாவும் ரயிலில் அவனை ஏற்றிவிட வந்த போது கேட்கிருன்...

'ராஜா!..அப்படியெண்டா நீ போவதெண்டே முடிவு செய்துவிட்டாய்....நீயில்லாமல் எனக்குத் தனிமை கொன்று விடுமேடா!...ஏண்டா உன் இதயத்தை மூடி விட்டாய்!..'

'பைத்தியக்காரன்!.....சூழ்வது இருட்டு!......அப்போது இதயம் மூடியிருந்தாலென்ன?.........திறந்திருந்தாலென்ன?...'

'பாலா என் மனதை மாற்றும் முயற்சியை விடு!...பிரியும் நேரத்தில் ஏன் மனஸ்தாபம்!...'

'சரி!...உன்னை நான் வற்புறுத்தவில்லை!..உன் அண்ணு இதற்கொன்றும் சொல்லவில்லையா?...அவர் சும்மா இருந்திருக்கமாட்டாரே!.....அவர் உன்மீது உயிராச்சே!..அவர் என்னடா சொன்ஞர்?...'

'தம்பி!...நான் உன்னைப் பற்றி......உன் படிப்பைப் பற்றி எவ்வளவோ எண்ணியிருந்தன்!...ஆஞ...எண்ணியபடி என்னதான் நடக்கிறது உலகத்தில்........ஆச்சியும், அண்ணயும் எவ்வளவோ கெஞ்சியும் நீ பிடிவாதமாகப் போறதில்ல ஏதோ அர்த்தமிருக்கத்தான் வேண்டும்...அதோட நீயும் யாழ்ப்பாணத்தைவிட்டுக் கொஞ்ச நாள் பிரிஞ்சு இருக்கிறதும் எனக்கொரு விதத்தில நல்லதாகத்தான் படுகுது...அண்டைக்கும் ஆடுகால் ஏதோ சொல்லிச்சு!...நான் அதைப் பெரிசா எடுத்துக்காட்டியும், அதில் கொஞ்சம் உண்மையிருந்ததும் எனக்குத் தெரியும்...சரி!...சரி நீ போய் விட்டு வா!.........உடம்பைத் தான் கவனமாப் பாத்துக் கொள்.....குளிர் தேசம் சட்டை போட்டுக்கொண்டிரு எப்பவும்!.....என்ன புரிஞ்சுதா?......'—அண்ணனின் குரல் இப்பவும் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'அவர்தான் உள்ளத்தைக் காட்டமாட்டாரே!.'.... உன் விருப்பம் அப்படியெண்டா நான் என்ன தடை செய்கிறது. நீயும் வயது வந்த பின்னை!...'...எண்டு சொல்லி விட்டாரடா!...'

'சரி நான் தந்த விலாசத்துக்குப் போய் அய்யாவைச் சந்திச்சியெண்டா அவர் உனக்கு எல்லா உதவியும் செய்வார்...ரயில் புறப்படப் போகுது...அடிக்கடி கடிதம் போடு...'

'தடங்...தடாங்!...'—ரயில் நிற்கிறது. வெளியே ஆரவாரமாக இருக்கிறது.

'கண்டி ஸ்டேஷன்!'

பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்திலிறங்குகிருன். எங்கும் சிங்கள மயம். அவனுக்குப் பயமாகக் கூட இருக்கிறது.

'மாத்தயா கார் ஓணத!...'—என்று யாரோ யாரையோ விசாரிக்கும் குரல், அவனுக்கு நன்கு பரிச்சயமானதாகத் தோன்ற, திடீரெனத் திரும்பிப் பார்க்கிருன். அங்கு நின்றிருப்பவனைக் காண அவனுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவனும் ராஜாவைக் கண்டு விட்டு அவனை நெருங்கிவருகிருன். ராஜா பிரமிப்பின் எல்லையில் நிற்கிருன். வந்தவன்—

(தொடரும்)




## மழை நாள்

—க. விக்கிரம பாஸ்கரன்—

நற்றிரு நாள் அந்தப் பெருமழை பெய்திடுநாள்
பொற்றிரு நாள் அந்த மரங்கள் செழித்திடும் நாள்
நற்றிருநாள் அந்தச் செம்மண்ணுக்கு நன்னாள்
பொற்றிரு கொண்டே உழவர் உய்ந்திடு நன்னாள்.

எத்திக்கும் பெய்ததோ நன்மழை பெய்ததோ
முத்திக்கும் ஒருவழிகாட்டிடும் தண்மழைநாள்
சத்திக்கும் வழிபாடு உழவர் பூசனை செய்வரே
பத்திக்கும் ஒருபெரும் நன்னாள் அதுவன்றோ.

வாரணம் போல்பனைத்த பல பெரு மரங்களே
ஆரணம் ஓதித்தண் மழை கொண்டன பாராய்!
பூரண நிம்மதி நிம்மதி அடைந்தன—அம்மழை
சிரணம் செய்திட்ட பின்போடீ நங்காய்!

அங்கொரு சிறுஇல்லம் நடுவனில் காணாய்!
சங்குறு வடிவினதவ் வில்லம் நீ கேளாய்!
பாங்குறு தொலைவினில் பல பனை நீ பாராய்!
நுங்குறு கின்றன அவற்றினில் நோக்காய்!

நல்லிளம் மரங்கள் மழையினைக் கண்டங்கு
புல்லிடம் கொஞ்சும் சொல் நீ கேளாய்!
வல்லமை கொண்டிட்டு செழித்து நிற்கும்
நல்வண்ண வடிவினை நங்காய் நீ பாராய்!

—ஃ—

## கொட்டுகின்ற மழைத்துளிகள்!

—செ. குணரெத்தினம்—

கொட்டுகின்ற மழைத்துளிகள் கோடா கோடி—வில்லை
விட்டெழும்பும் 'அம்புகள்போல் விரைந்து, ஆடி
முட்டுகின்ற மரக்கிளை மேல் மோதிவென்று—மழை
"கொட்டுகின்ற வேகத்தை உழவன் கண்டு
மட்டில்லா மகிழ்ச்சியுடன் குடிசையுள்ளே—தன்
கட்டிலிலே படுத்திருப்பா னெ"ன்று எண்ணி
நெட்டைப் பனைகளெல்லாம் நினைத்து நிற்க—ஒரு
பட்டமரம் தன்பாட்டில் பதைத்து விம்மிக்
"கட்டையப்பா நானென்னை, நனைக்க வேண்டாம்—என்று
கொட்டுகின்ற மழைக்கது சொல்லி நிற்க
பக்கத்தில் நின்ற செடி மரங்களெல்லாம்—இதைப்
பாராது போல் நடித்து நிற்பதைப்பார்.

—ஃ—

## காட்சி நீ கண்டனையோ?

—குயிலினி அமிர்தா, அளவெட்டி—

அல்லல் ஏதறியா ஆண்டவனே நின்கருணை
தொல்லைகள் பலவந்து சூழும் இவ்வேளையிலே
வெற்றிக்கு வித்திட்ட வேலவனே
கற்றைக் கதிரவனே காட்சி நீ கண்டனையோ?

கார்மேகக் கூட்டமங்கே கண்ணே கவிழ்ந்ததுவே
காலமோ காதவேளை கண்ணைப் பறித்ததுவே
வேரோடு வேராய் வெறி பிடித்த மரங்களெல்லாம்
நெஞ்சம் படபடக்க நெடிதுயர்ந்த நீள் மரங்கள்
கொம்பர் பலசெறிந்து கோமகனாய் வாழ்ந்துவிட்ட
காடே கிடுகிடுத்துக் காற்றுப் பேய் கொள்ளிடவே
ஒற்றைக் குடில் அங்கே ஓலைப்பாய் வேய்ந்தபடி
கொட்டில் அதுவே தான் கோமகர்க்கு ஆ வளர்க்க
எட்டிப் பிடித்து விட்டால் எல்லாமே எளிதுலங்கும்
சோ என்ற மாரியுமோ சொல்வழியும் கேளாதாம்
வீடின்றி வாசலின்றி வெற்றுமனை வேறின்றி
வெய்துயிர்த்து விம்மியே வேராய்ச் சமித்தனரோ?
ஐயோ என்ற அழுகுரலும் எழுப்பினரோ?
நெஞ்சம் பதைபதைக்க நெக்கு நெக்கு நகுவாரோ?
ஊரற்று உலகமற்று யாருமற்று எவருமற்று
உழைத்து உரம்பெற்ற உண்மை உளம் இரண்டங்கு
உண்ண வழிதேடி உறக்க மது தேடினரோ?
வாழ வழி வகுத்த வள்ளலே வாழி என்றும் வாழி நீ
ஈன்று உனை உணர்ந்த உத்தமனே உரியவனே
அன்றில் என அங்கே அன்பால் இணைந்தவரை
சென்று நீ காத்திடுவாய் திடசித்தமானவனே.

—ஃ—

## வானப் பந்தர்!

—"வேலணை முகிலன்"—

தாங்கும் தூணும் இல்லாமல்
தச்சன் வேலை செய்யாமல்
தொங்கும் வானப் பந்தலிலே
தோன்றும் அழகைப் பார் தம்பி.

நீல வண்ணப் பட்டதனை
நீள விரித்து அதன் மேலே
கோல முத்துப் பரல்களையே
கொட்டி விட்டான் ஒரு செல்வன்.

கூனற் பிறையைத் தன் முடியில்
கொண்ட உலக முதல்வனுமே
வானப் பட்டு ஆடைமேல்
வளர்த்தி விட்டான் இளமதியை!

## 23-6-63 இதழில் பிரசுரமான படமும்



## மருமக்கள் உவந்தளித்த இனிய கவிதைகளும் இதோ!

## மனை தோணுதடா!

—'நவாலியூர்க் கவிராயர்'—

வானங் கறுத்திடவே—மழை
வண்ணக் கீற்றுகளா யெழில்
வனப்புக் காட்டுதடா!—நம்
வள முயர்த் திடவோ?

பனை, மாமரமும், பலா—செடி
பல கொடியுமாய் யொரு
மனை தோணுதடா!—அக
மிளிர வாழ்ந் திடவோ?

காடு மேடு வெட்டி—இன்பக்
கழனி சமைத்துப் புவியில்
கோடை மாரியெலாம்—கூடிக்
குலவி வாழ்ந் திடவோ?

நெஞ்சைப் பிளந்ததுபோல்—
அருவி
நதி சமைத்துப் பூமியிடை
பஞ்ச மகற்றிடவோ—நிதம்
புரண் டங்கு செல்லுகிறாள்!

—*—

## ஏரை உயர்த்தாதோ?

—"பாண்டியூரன்"—

கருமுகில் தொய்ய
பெருமழை பெய்ய
பரவிடு நதி பாராய்—எங்கும்
பாவிடு நதி பாராய்!—வெய்யில்
கருகிட நின்ற மருத மரத்து
பெருமித இசை பாராய்—
இன்பப்
பெருமித இசை பாராய்!

பாரி நிகர்த்த மாரி யுதிர்த்த(க்)
கூரை நனைந் தோட—கொட்டில்
கூரை நனைந் தோட—வாடை
ஏரி நிறைத்து 'வாரி'விளைத்து
ஏரை உயர்த்தாதோ—பாரில்
ஏரை உயர்த் தாதோ!

தெங்கு மரத்து மங்கை
நிரைத்து
பொங்கு தமிழ் பாடி—இன்பம்
பொங்கு தமிழ் பாடி—வீரச்
சங்கை எடுத்த கங்கை மகற்கு
நுங்கு நுரை வீசும்—நகை
நுங்கு நுரை வீசும்!

தெள்ளு தமிழ்ப்பா
வள்ளுவ நூற்பா
உள்ளம் இனிப் பாகும்—
பொருள்
உள்ளம் இனிப் பாகும்—
அந்த
வள்ளல் உரைப்பால்;
வான உயிர்ப்பால்,
கொள்ள நினைப்பாகும்—பாடல்
கொள்ள நினைப்பாகும்!

## தமிழ் பேசும் இளைஞர்களே!

உங்களின் உரிமைக் குரலான சுதந்திரன் அகில இலங்கை ரீதியாகப் பேச்சுப் போட்டியொன்று நடாத்தப் போகிறது என்று தெரிவித்ததும், உங்கள் உள்ளங்களில் தோன்றிய உவகை உணர்ச்சிகளை நீங்கள் அவ்வப்போது எழுதிய அஞ்சல்கள் மூலம் அறிய முடிந்தது.

தமிழ் பேசும் இளைஞர்களாகிய உங்களுக்கு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் முதல் பேச்சுப் போட்டி இதுவேயாகும். அந்தப் பெருமை உங்கள் உரிமைக் குரலுக்கே உரித்தாகிவிட்டது. அந்த வகையில் உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி!

பேச்சுப் போட்டிக்குரிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி நாள் 16ம் திகதி என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளவும்.

இதுவரையில் விண்ணப்பம் அனுப்பாதவர்கள் யாராவது இருந்தால் உடன் அனுப்பி வையுங்கள். மீண்டும் ஒரு முறை முடிவு தேதியைப் பின் போடமுடியாது. இதுவே இறுதி முடிவு நாளாகும். விண்ணப்பம் அனுப்பத் தவறி விட்டோம் என்று பின்னர் கவலைப் படாதீர்கள்.

இடை இறுதிப் போட்டிகள் பற்றிப் பேச்சுப் போட்டிக் குழு ஆராய்கிறது. கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோன்றும் மாணவர்கள் பலர் இப்போட்டியில் கலந்துகொள்வதால் அவர்களுக்கு வசதியாகவே இடை இறுதிப் போட்டிகள் நடைபெறும் காலம் நிர்ணயிக்கப்படும்.

இடை இறுதிப் போட்டிகள் நடைபெற வேண்டிய இடங்கள் பற்றி அவ்வப் பகுதிப் பொறுப்பாளர்களுடன் பேச்சுப் போட்டிக் குழு தொடர்பு கொண்டுள்ளது. அவர்கள் அவ்வப் பகுதிக்குரிய பொதுவான இடங்களைத் தெரிவு செய்து நமக்கு அறிவித்ததும், நாம் அவற்றை இப்பகுதியில் பிரசுரிப்போம். எனவே இடை இறுதிப் போட்டிகள் நடைபெறும் இடங்களையும் காலத்தையும் தெரிந்து கொள்வதற்கு இப்பகுதியைத் தொடர்ந்து கவனிக்கவும். இது பற்றி யாருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கொள்கிறோம்.

—பேச்சுப் போட்டி ஆசிரியர்

......................இங்கே வெட்டுங்கள்......................

### "சுதந்திரன்" பேச்சுப் போட்டி விண்ணப்பப்பத்திரம்

பெயர்..................................................

முகவரி......................................

..............................

மாணவராயின் பாடசாலை முகவரி:-

......................................................

..................................

போட்டியில்
கலந்துகொள்ளும் இடம்......................................

பேச எடுத்துக்கொண்ட
பொருள்..................................................

பிறந்த திகதி......ஆண்டு.........மாதம்.........திகதி.........

...........................
பெற்றோர் அல்லது
ஆசிரியர் கையொப்பம் ...................... கையொப்பம்

## கவிதை காணீர்!

—'நீலவண்ணன்'—

படம் தந்து பாட்டிசைக்கப்,
பணித்த (அ)ம் மாத்திரத்தில்
புடம் போட்ட நம் தமிழில்,
பிறந்து விட்ட கவிதை காணீர்!

பிறர் வாழ உடலீய்ந்திப்,
பிறவிப் பயன் காணும்,
கருணை வள்ளல் கருமேக ராஜனவன்.
வருணை காணாது வாடும் முகம் காணச் சென்றான்

திக்கு முக்காடி திறனிழந்து சாய்ந்து நிற்கும்.
குக்கி ராமத்தின் கொடி செடி நிலை கண்டான்;
உள்ளம் உருகிடவே உருவெடுத்த கருணை உள்ளம்.
வெள்ள மென நீய்த்து பொழிந்து நின்றான்
தன்னுடலை.

கொட்டில் வாழும் குடியான ஏழையவன்
குடும்பத்தார் உளமெல்லாம்.
மட்டில்லா மகிழ்வோடு; பொழிந்து நிற்கும்.
மழை வெரிவைக் காத்திருப்பர்.

# கழகச் செய்திகள்

## அமரர் வன்னியசிங்கத்துக்கு சிலையமைப்பது குற்றமா?

### இணுவில் தமிழ் மன்ற கூட்டத்தில் தலைவர்

'அண்மையில் யாழ் நகர சபையில் தமிழ் மக்களின் தலைவர்களுள் ஒருவரான காலம் சென்ற திரு. வன்னியசிங்கத்திற்கு சிலை அமைப்பதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட்டமைக்கு மகிழ்ச்சி. ஆனால் தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றி விட்டால் போதாது! செயலாற்ற வேண்டும்.

தமிழ்த் தியாகி வன்னியசிங்கத்திற்கு சிலை அமைப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவிப்போர் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து வருந்துகின்றேன். பட்டம் பதவிக்காக கட்சிமாறும் பச்சோந்திக் குணம் படைத்தவர்கள், தன் மானத் தலைவர் வன்னியசிங்கத்துக்குச் சிலை எழுப்ப மக்கள் விரும்பும் போது கண்டிப்பதேன்? மட்டு நகர் மக்களின் மானப்பிணைப் பார்த்தாவது காட்டிக்கொடுக்கும் பரம்பரையில் வந்தோர் திருந்துவார்கள் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் எதையும் செய்யாமல் பிறர் செய்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருப்பவர்களிடம் அமரர் வன்னியசிங்கத்தின் சிலைக்கு செலவாகும் தொகைக்கு பணம் வாங்காதீர்கள் என்று இத் தொண்டை முன்னின்று நடாத்தும் பெரியவர்களிடம் தமிழ்த்தாயின் பெயரால் வேண்டுகின்றேன். கட்சிச்சார்பற்ற எமது மன்றம் அன்னாரின் சேவையையும் தன்னலமற்ற கொள்கையையுமே போற்றி வரவேற்கின்றது. பாராட்டுகின்றது. அற்ப சலுகைக்கும், பதவிக்கும் ஆசைப்படாமல் தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மொழி உரிமைக்காகவுமே தன்னை அர்ப்பணித்து, அதன் காரணமாகவே மரணத்தின் வாசலுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். அத்தன்மை வாய்ந்த ஒரு தியாகிக்கு நினைவுச் சின்னம் கல்லில் எழுப்புவது கூடாதா? தமிழ் மக்கள் மனம் தோறும் அவர்கள் நினைவு நீங்காது இடம் பெற்றுவிட்டது. தன் மானத்துடன் தமிழுக்காகப் போராடிய ஒரு தலைவரை வருங்கால உலகம் மறக்கப்படாது என்பதற்காகவே சிலை அமைக்கும்படி வேண்டுகின்றோம்.

இவ்வாறு இணுவில் தமிழ் மன்றத்தின் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மன்றத் தலைவர் திரு. கே. எஸ். ஆனந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அமரர் வன்னியசிங்கத்திற்கு மாநகரசபை சிலை அமைப்பது போன்று சிவ தொண்டன் நிலையத்தார் அல்லது சைவ பரிபாலன சபையினர் சைவப் பெரியார் ஆறுமுகநாவலருக்கும் சிலை எழுப்ப முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

---

### திருகோணமலை இந்துசமய பரிபாலனசபை

திருகோணமலை கடற்படை இந்து சமயபரிபாலன சபையின் 3வது வருடாந்தக் கூட்டம் 19-6-63 புதன்கிழமை மாலை 4-30 மணியளவில் கடற்படை சிவிலியன் விளையாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் திருவாளர் இரத்தின துரையின் பக்திப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமானது. காரியதரிசியினதும், தனாதிகாரியினதும் வருட அறிக்கைக்குப் பின் தலைவர் அவர்கள், டொக்யாட் பிள்ளையார் கோவில் கட்டிட வேலைகள் ஆரம்பமாகிவிட்டதென்றும் எல்லோருடைய ஒத்துழைப்பிற்கிணங்க இத் திருப்பணியாகிய பெரும் பணியை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அத்துடன் அடுத்த வருட உத்தியோகஸ்தர்களும் தெரிவு செய்யப் பட்டார்கள்: தலைவர்: மு. நல்லையா, உப தலைவர்: சு. விசுவநாதன், இணைக் காரியதரிசிகள்: சி. பொன்னம்பலம், வ. நவரத்தினம், உபகாரியதரிசி: க. குட்டிதம்பி, தனாதிகாரி: என். தருமலிங்கம், கணக்குப் பரிசோதகர்: கு. நமசிவாயம்.

மற்றும் 21 பேர்களைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

### இணுவில் புதிய சந்தை திறப்பு விழா

உடுவில் கிராம சபையினால் கட்டுவிக்கப்பெற்ற இணுவில் சந்தை புதிய கட்டிடத்திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை 2-6-63 பகல் சிறப்பாக நடைபெற்றது. உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம், வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர், கிராம வேலை நிருமாண உத்தியோகத்தர் திரு. சி. பத்மநாதன் ஆகியோர் இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப் பெற்றனர். இக் கட்டிடத்தைப் பொறுப்பேற்று நிறைவேற்றி வைத்தவர்கள் இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். ஆகவே கூட்டுறவு உதவி ஆணையாளர் அவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக இப் புதிய கட்டிடத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைத்தார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் புதிய சந்தையைத் திறந்து வைத்தார்கள்.

இதன் பின் சந்தை மண்டபத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிராம சபைத் தலைவர் திரு. வி. தருமலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

---

### மணிவாசகர் குருபூசை விழா

"சைவத்திலே பிறந்து சைவத்திலே வளர்ந்து சைவத்திலேயே உயிர்விட்ட அடியார்கள் பலர். அதில் மிக முக்கியமான நால்வரில் மணிவாசகர் தனிச் சிறப்புடையவர். சமய வளர்ச்சி குன்றி சமயச் சான்றோரின் இதய தாமரைகள் எல்லாம் கூம்பிப் பொழி விழந்து நின்ற காலை அவற்றை மலரச் செய்வான் வேண்டி மணிவாசகரான ஞான தினகரன் உதயம் செய்தார். இத்துணைப் பெருமை வாய்ந்த மணி வாசகருக்கு விழா எடுப்பது மட்டும் நாம் செய்யும் பிரதியுபகாரம் அல்ல. மணி வாசகரைப் போல நாமும் எம்மாலான தொண்டினை நம் சமயத்திற்குச் செய்ய வேண்டும்."

கொழும்பு தெமட்டக் கொடை அரசினர் தமிழ் வித்தியாலய சைவ இளைஞர் மன்றத்தின் சார்பில் 26-6-63ல் நடைபெற்ற மணிவாசகர் குரு பூசை விழாவுக்குத் தலைமை வகித்த தலைமை ஆசிரியர் பண்டிதர் செ. சிவலிங்கம் அவர்கள் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. அ. வை. முத்துசாமி அவர்கள் பேசும் போது மணிவாசகர் சரிதம் தத்துவக் கருத்துக்கள் அடங்கிய தென்றும் அவற்றை எம்மால் உணர்ந்து கொள்வது மிகவும் கஷ்டமான தென்றும் கூறி மணிவாசகரின் சரித்திரத்தை மாணவர்களுக்கு எடுத்து உரைத்தார்.

ஆசிரியர் திரு. சி. இரத்தினம் அவர்கள் பேசும் போது, "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து, அந்த இறைவனின் கழல்களில் எம் தலையை வைத்து தேனமுதத் திருவாசகங்களைப் பாடிப்பிறவிப் பயனடைந்து இன்புறுதல் எமது கடன்" என்று குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவிகள் இடையிடையே திருவாசகம் ஓதினர். மன்றப் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. இ. சிவானந்தம் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்திற்று.

---

### தொல்புரம் மத்திய சனசமூக நிலையம்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிக சாலைச் சமய பாட வகுப்பு மாணவ மாணவிகள் கடந்த வருடம் கொழும்பு விவேகானந்த சபையார் நடத்திய சமய பாடப் பரீட்சைக்கு மேற்படி நிலையத்தின் சார்பில் பங்குபற்றினர். பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தொகை 22: சித்தியடைந்தவர்கள் தொகை 10.

சித்தியடைந்தோர் விபரம்: ஆரம்பபிரிவு 1: கிருஷ்ணர் நடராசா.

ஆரம்பப்பிரிவு 2: பூலோகராசா தனலட்சுமியம்மா, சின்னத்துரை நந்தாவதி, இராசக்கோன் யதுகுலராணி, பொன்னர் யோகேசுவரி, முருகேசு பவள மலர்.

கீழ்ப்பிரிவு 1: இதில் பங்குபற்றிய எவரும் சித்தியடையவில்லை.

கீழ்ப்பிரிவு 2: இராசக்கோன் சோதிராசா, முருகேசு சடாச்சாரம், இராசக்கோன் குணராசா, கந்தையா சயனொளிபவன்.

---

### சங்கானை இளைஞர் கழகம்

சங்கானை இளைஞர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 30-6-63 காலை 9-30 தொடக்கம் 12-30 வரை சங்கானை தேவாலய வீதியில் உள்ள 68ம் இலக்க இல்லத்தில் கழகத் தலைவர் திரு. இ. நா. இராசசேகரம் தலைமையில் கூடிய போது, மறைந்த தலைவர் திரு. வே. அ. கந்தையா அவர்களின் மரணம் குறித்து இரு நிமிட நேர மௌனம் அநுட்டிக்கப்பட்டது. அத்துடன் பின் வரும் தீர்மானங்களும் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

சுகயீனம் உற்று இருக்கும் வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், திடகாத்திரராக மீண்டும் எம் முன் வந்து தமிழ் பேசும் இனத்திற்கு முன் போல சேவை செய்ய ஆண்டவன் அருள் பாலிக்க வேண்டுமென கழகத்தின் சார்பாக ஆண்டவனைப் பிரார்த்தித்தல்.

அமரர் கந்தையாவின் ஞாபகார்த்தமாக ஓர் நூல் நிலையம் சங்கானையில் நிறுவுவதற்குக் கழகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இளைஞர்கழகம் சென்ற ஆண்டு நடாத்திய காந்தி ஜெயந்தி விழாவை இம் முறையும் சிறப்பாக நடாத்துவது.

கீழ்க்காணும் இரங்கல் அறிக்கை அமரர் கந்தையா குடும்பத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

---

### அமரர் கந்தையாவுக்கு அஞ்சலி

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே-என்ற கீதையின் வாக்கியத்தை முன்னோடியாக வைத்து தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் தமிழுக்காகத் தியாகம் செய்த தியாகத்தின் செம்மல் திரு. வே. அ. கந்தையா அவர்கள் தமிழ் அன்னைக்காக, தமிழ் இன மக்களின் விடுதலைக்காக, கல்லடிபட்ட போது கலங்காதும், பொல்லடி பட்ட போது பொறுத்திருந்தும், சொல்லடிகளுக்கும் சோராது, சிறைக்கதவு திறந்த போது சிரித்த முகத்துடன் ஏற்று அறப்போர்கள் பலவற்றை ஆண்மையுடன் அணிவகுத்து, பிறப்புரிமை எமதென்று சிறப்போடு பலர் ஏற்க சிங்கநாதம் செய்த தமிழ்த் தலைவன் கந்தையா, அடக்கு முறை பலவற்றை ஆண்மையுடன் எதிர்த்து பொலிசாரின் பொல்லடியால் ஏற்பட்ட புண் இதயத்தோடும் கடமையையே கண்ணெனக் காத்து இறுதியில் தமிழ் மக்கள் அனைவரையும் தவிக்க விட்டுச் சென்ற தமிழ்த் தலைவன், சரித்திரத்திலேயே சபாநாயகர்ப் பதவி ஏற்று கடமையைச் சரிவரச் செய்த பெருமை நம் கந்தையா அவர்களுக்கே உரித்தாகும் (ஜெனிவா வில்). சமஷ்டிக்கு விளக்கம் கொடுத்த தமிழ்த் தலைவன், பேரறிஞர் பலர் போற்றும் பொருளாதார மேதை திரு. வே. அ. கந்தையா அவர்கள். அரசினரின் அடக்குமுறைக்குப் பலியாகி ஆவி தீர்த்த அமரர் கந்தையா அவர்களுக்கு எமது கழகத்தின் இறுதி அஞ்சலி.'

---

## மாதளபதி மயிரிழையில்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டி வேலரா அமெரிக்காவில் இருந்த காலத்தில் அவரது மனைவியாரதும் மக்களதும் சுகத்தை அறிந்து மைக்கேல் கொலின்ஸ் கிரமமாக டி வேலராவுக்கு அறிவித்து வந்தார்.

இங்கிலாந்தில் பிரித்தானியப் பிரதமர் லொயிட் ஜோர்ஜ், 22-12-1919ல் அயர் நாட்டுக்கான சிறந்த ஆட்சி மசோதாவை மக்கள் சபையில் சமர்ப்பித்தார். அள்ஸ்ரர் மாவட்டத்திலுள்ள ஒன்பது மாவட்டங்களில் ஆறு மாவட்டங்களுக்காக ஒரு பாராளுமன்றமும் ஏனைய அயர் நாட்டுக்கு இன்னுமொரு பாராளுமன்றமும் நிறுவுதல்; இவ்விரு பாராளுமன்றங்களுக்கும் மேலாக ஓர் அகில அயர்நாட்டுச் சபையை நிறுவுதல்; இந்த சபையில் ஒவ்வொரு பாராளுமன்றத்தின் சார்பிலும் 20 உறுப்பினர்களும் அதன் அவையதிபராக ஆங்கில மாதளபதியின் பிரதிநிதியொருவரும் இருப்பர்; இந்தச் சபையை ஆட்டி வைக்கக் கூடிய வல்லமை லண்டனிலுள்ள பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு இருக்கும். இதுவே இந்த மசோதாவின் சாராம்சம். இந்த மசோதா அயர் நாட்டை இரண்டு துண்டுகளாகப் பிரித்து ஒரு பிரிவை இங்கிலாந்து என்றென்றும் தன்னுடன் வைத்துக் கொள்வதற்கு வழிவகுத்தது. மற்றப் பிரிவு சுதந்திரக் குடியரசாளுனும் கைவசம் இருக்கும் பிரிவில் இருந்து கொண்டே அந்தக் குடியரசைத் தாக்கவும் இது வழி வகுத்தது. இத்தனைக்கும் அள்ஸ்ரர் மாகாணத்தின் குறிப்பிட்ட 6 மாவட்டங்களில் பெரும்பான்மையாக இருந்தவர்கள் ஆங்கிலேய ஆட்சியினரால் ஸ்கொத்லாந்திலும் இங்கிலாந்திலுமிருந்து கொண்டுவரப்பட்டுக் குடியேற்றப்பட்ட புரட்டஸ்தாந்து வெறியர்கள்! இந்த மசோதாவை விடுதலை விரும்பிய கைலிக் இனத்தைச் சேர்ந்த மக்கள்—அயர் இன மக்கள் பிரிவினை மசோதா என்று அழைத்தார்கள்.

புத்தாண்டு பிறந்தது. அயர்நாட்டில், நகர, மாநகர சபைத் தேர்தல்கள் நடைபெற விருந்தன. இத் தேர்தல்கள், அயர் மன்றம் நிறுவப்பட்டதை அயர் மக்கள் விரும்புகிறார்களா என்பதைச் சோதிப்பதற்கு உரைகல்லாக விளங்கியது. தேர்தல் பிரசாரத்தின் முதல் படியாகத் தொண்டர்கள் கோக் மாவட்டத்திலிருந்த பொலீஸ் படை வீடொன்றைத் தாக்கினர்.

(வளரும்)

---


பிரம்மீ கேசரஞ்சன தைலம்



கண்ரூடு, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல், முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச்செய்கிறது. [illegible]

A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே [illegible]

B 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.

2வது வெற்றி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை)

மொடர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

புரட்சிகரமான வீரம்! புதுமையான நடிப்பு!
அற்புதமான ஆடல் பாடல் நிறைந்த
திரைச் சித்திரம்!

சி. எல். ஆனந்தன்—சி. எஸ். புஷ்பலதா
எம். ஆர். ராதா—ராஜ்ஸ்ரீ—எஸ். கலாவதி
டி. ஆர். நடராஜன்—ஆர். பக்கிரிசாமி
வி. கே. ராமசாமி—முத்துலட்சுமி
மற்றும் பலர் நடித்த

# செங்கமல தீவு

---

2வது வெற்றி மாதம்!

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை)

மற்றும் 4 திரைகளில்!

விசாலாட்சி பிலிம்சாரின்

# சுமைதாங்கி


(ஆயிரம் வாசல் இதயம்)

திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்
—ஸ்ரீதர்—

ஜெமினிகணேசன் (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) தேவிகா
முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி
முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி

நடனம்:
குமாரி கமலா



---

வெள்ளி 26 முதல்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

ஏ. நாகேஸ்வரராவ்,
எம். ஆர். ராதா, ஏ. கருணாநிதி,
எஸ். பாலச்சந்தர், லட்சுமிராஜம்,
சௌகார் ஜானகி, பேபி காஞ்சனா
நடிக்கும்





மோகேஷ்வர் சித்ராவின்

# பெண்மனம்



பாடல்கள்:
கண்ணதாசன், மருதகாசி,
தஞ்சாவூர் ராமையாதாஸ்
பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா,
சுசீலா, ஜமுனாராணி, ஜிக்கி.

---

3-வது வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

ராஜசுலோசனா,
முத்துக்கிருஷ்ணன்,
விஜயலட்சுமி, மனோரமா
நடிக்கும்

# பொன்னித் திருநாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால்

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, பானுமதி, (காலஞ் சென்ற) என். எஸ். கிருஷ்ணன், மதுரம்
நடித்த

# மதுரை வீரன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.